நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 01 சனவரி-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை 14.09.1901 THE FOURTH TAMIL SANGAM

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் M.B.A., | உறுப்பினர் |
| முனைவர் க.பாலகிருஷ்ணன் | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

# பொருளடக்கம்


1. நலிந்ததே நெற்குப்பை நாற்றங்கால் — 6
   பேராசிரியர் தெ.முருகசாமி

2. முத்தொள்ளாயிரத்தில் உவமைகள் — 7
   முனைவர் பா.நேருஜி

3. மணிமேகலையில் சாங்கியத் தத்துவம் — 14
   சி.கலியமூர்த்தி (முனைவர்பட்ட ஆய்வாளர்)

4. சிற்பக் கலையும் பரிபாடலும் — 19
   முனைவர் உ.கருப்பத்தேவன்

5. தொல்காப்பியம் நம்பியகப்பொருள் கற்பியல் ஒப்பீடு — 30
   முனைவர் செ.ரவிசங்கர்

6. பக்தி இலக்கியத்தில் மகளிர் — 38
   முனைவர் சு.மலர்விழி

7. சங்கச் செய்திகள் — 41

# இதழ் மணம்

கவிஞர் தெ.முருகசாமி நலிந்ததே நெற்குப்பை நாற்றங்கால் என்னும் இரங்கற்பா எழுதியுள்ளார். அப்பாட்டு கற்பார் மனத்தே பேராசிரியர் தமிழண்ணலின் அருமை பெருமைகளைச் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளது. அண்ணலின் திருவடிக்கு இப்பாமாலையும் அணிசேர்ப்பதாக!

முத்தொள்ளாயிரம் சேரர், பாண்டியர், சோழர் ஆகிய மூவேந்தர் களைக் குறித்து எழுதப்பட்ட மிகப்பழமையான இலக்கியம். ஒவ்வொரு வேந்தரைக் குறிக்கும் தொள்ளாயிரம் பாக்கள் புலவர் பெருமக்களால் பாடப் பட்டுள்ளது. மொத்தம் இந்நூல் இரண்டாயிரத்து எழுநூறு பாடல்கள் கொண்ட கவினுறு கற்பனை வளமிக்க உவமை நயம் சிறந்த நூல். இந்நூலைக் கற்பவர்கள் உவமை இன்பத்திலும் காதல் காட்சிகளை ஆசிரியர் மனத்திரையில் காட்டும் அழகிலும் தன்னை மறந்து திளைப்பர். அத்தகைய பேசும் ஓவியமாக இந்நூலின் பாக்கள் வெண்பாவில் அமைந்துள்ளன. ஆனால் இவ்அரிய நூல் காலத்தால் மறைந்து தற்பொழுது நூற்றுப்பத்துப் பாடல்களே (110) நமக்குக் கிடைக்கின்றன. உவமைக் காட்சிகளை தமிழ்ப் பேராசிரியர் நேருஜி அவர்கள் கட்டுரையில் எடுத்துக் காட்டிய திறம் போற்றுதற்குரியது.

முனைவர் பட்ட ஆய்வாளர் சி.கலியமூர்த்தி மணிமேகலையில் சாங்கியத் தத்துவம் என்னும் பொருளில் கட்டுரை வரைந்துள்ளார். காப்பியத்தில் மணிமேகலை - தத்துவ ஆராய்ச்சியைத் திறம்படச் செய்துள்ளது. தமிழுலகில் மிகப்பழங்காலத்தில் பௌத்த சமயம் விரிந்து பரந்த செல்வாக்குடையதாக விளங்கியது. சீத்தலைச் சாத்தனார் பௌத்த சமய மெய்ப்பொருள் கோட்பாட்டிலும் பிற சமய மெய்ப்பொருட் செய்திகளையும் நன்கு கற்றறிந்த தத்துவப் பேராசிரியர் ஆவார். அப்பெரியார் பௌத்த சமயக் கொள்கைகளை நூல் முழுவதும் புத்த பிரானின் அருள்நெறி வழிநின்று சொல்பிறழாது மணிமேகலையில் விளக்கியிருக்கும் திறம் கற்போர்க்கு இன்பம் பயப்பதாகும். மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் இந்திய சமயத் தத்தவங்களை எடுத்துரைக்கும் பாங்கு போற்றுதற்குரியது.

உரையாசிரியர்கள் ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமி பிள்ளை போன்ற சான்றோர்கள் சாத்தனாரின் தத்துவத் திறம் குறித்து விளக்கியிருக்கும் நுட்பம் மாணவர்கள் கற்று இன்புறத் தக்கது. முனைவர்பட்ட ஆய்வாளர் சி.கலியமூர்த்தி, மணிமேகலையில் சாங்கியத் தத்துவம் என்ற தலைப்பில ஆய்வு செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

தமிழகத்தில் நமக்குக் கிடைத்துள்ள செவ்விலக்கிய நூல்களுள் ஓங்கு பரிபாடல் எனப் பழைய வெண்பா ஒன்று பரிபாடலைச் சிறப்பிக்கிறது. பரிபாடல் மக்கள் வழக்கிலிருந்த இசைப் பாடல்கள் ஆகும். இப்பாடல்களைப் பாடியவர்கள். இசையமைத்தவர்கள் பெயர்கள் தவறாமல் பாடல்களின் அடிக்குறிப்பில் நமக்குக் கிடைத்திருப்பது பண்டை நாட்களில் மக்கள் இசைச் செல்வமாக இப்பாடல்கள் விளங்கின என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இப் பாடல்களில் பொதிந்துள்ள செய்திகள் எல்லாம் கோயில் மரபை ஒட்டி அமைந்திருப்பதும் அவைகள் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் பிற்காலத்தில் கோயில் கோபுரங்களிலும், விதானங்களிலும் அமைந்திருப்பதை நுண்ணிதின் ஆய்ந்து பேராசிரியர் உ.கருப்பத்தேவன் அவர்கள் விளக்கியிருக்கும் செய்தி பாராட்டுதற்குரியதாகும். கோயில்களில் வழங்குகின்ற நடைமுறைகளும் சொற்களும் புனிதமானவைகளாகக் கருதப்படுவது மரபு. அம்மரபை ஒட்டி கோயிற் சிற்பங்களும் ஓவியங்களும் தொன்மங்களும் படைக்கப்பட்டுள்ளன. முதன் முதலாகப் பரிபாடல் இவற்றையெல்லாம் நிரல்பட இன்னோசையுடைய பாடல்களாக படைத்திருக்கிறது. அப்பாடல்கள் தொன்மங்களும் கோயிற் சிற்பங்களும் ஓவியங்களும் 16,17ஆம் நூற்றாண்டுகளில் மன்னர்களால் கோபுரங்களை அமைக்கும்போது அவற்றை அணி செய்வதற்குரிய மரபு பரிபாடல் வழிநின்று மரபு பிறழாது கோயில் வளாகத்தில் அவை காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை பேராசிரியர் உ.கருப்பத்தேவன் அவர்கள் எடுத்துரைப்பது ஆய்வாளர்களின் சிந்தனைக்கு உரியதாகும்.

முனைவர் செ.ரவிசங்கர் கற்பியல் நெறிமுறைகளை தொல்காப்பிய ஆசிரியரும் நம்பியகப் பொருள் ஆசிரியரும் விளக்கியிருப்பதைக் கட்டுரையில் சிந்தித்திருக்கிறார். திருமணம் என்பது மரபு வழியாக உலகம் எங்கும் குடும்ப அமைப்பிற்கு இன்றியமையாத தலைவன் தலைவி இருவரும் ஒரு வரம்பில் நிற்றற்குரிய ஒழுகலாறுகளையும் அவர்களுக்குரிய வரம்புகளை வரைவு என்ற அடித்தளத்தில் நின்று இரு பெரும் ஆசிரியர்களும் சுட்டியிருக்கும் செய்திகளை எடுத்துரைக்கிறார். 'களவு' என்பது திருமணத்திற்கு முன்பு மறைந்து ஒழுகும் காதல் எனலாம். 'கற்பு' என்பது திருமணமும் அதன் பின்னே அன்பின் இருதலையாகிய கூடலும் ஊடலும் ஆகிய வாழ்வாங்கு வாழும் முறையை எடுத்துரைப்பதாகும். இக்கட்டுரை ஆசிரியர் இருபெரும் இலக்கண ஆசிரியர் வழிநின்று சிந்தித்திருக்கும் திறம் போற்றுதற்குரியதாகும்.

# நலிந்ததே நெற்குப்பை நாற்றங்கால்

நெற்குப்பை தான்பிறந்த நின்றசீர் தமிழண்ணல்
நெற்பயிர் நாற்றாக ஆங்காங்கே நடப்பட்டார்!
மேலைச் சிவபுரியில் மேனாள் தமிழ்கற்றுச்
சீலமுடன் காரைக் குடியில் பணியாற்றி
ஆலை அதிபர் கலைத்தந்தை தியாகராசர்
வேலை தரவே விருப்புடன் மாமதுரைக்
கல்லூரிப் பணி சேர்ந்து பொற்பான காமராசர்
நல்லபெயர் பல்கலையின் தமிழ்த்துறைப்பேராசான்
பணிமுடித்த அண்ணலவர் பயிரான இடத்திலெலாம்
அணிமணியாய் ஆராய்ச்சி அறுவடையாம் விளைச்சலைக்
கற்பார் அனைவர்க்கும் கன்னித் தமிழ்விதையாய்ப்
பொற்புடன் சேமித்தே புதுவிளைச்சல் காணுதற்கும்
எத்தனை ஆராய்ச்சி! எத்தனை நூலாக்கம்!
அத்தனையும் அண்ணலார் இருப்பாக்கிப் புகழ்சேர்த்தார்!
விருதோடு பட்டங்கள் வேண்டா மெனுமளவும்
கருதுமாறு வாழ்ந்திட்டார்! காலமெலாம் புகழ்கொண்ட
குன்றக் குடியோடு கோவிலூர் ஆதீனம்
என்ற திருமடத்தின் தமிழ்த்தொண்டின் துணையாக
உழைத்தபெருந் தன்மையால் ஊர்மெச்ச சீர்பெற்றுத்
தழைத்திட்ட அண்ணலவர் தமிழ்வாழ்வை நினைக் கையிலே
செவ்வியலாம் செந்தமிழ்ச் செம்மொழிப் பூரிப்பில்
கவ்விக் கிடந்தே கனத்த புகழ் பெற்றிட்டார்!
அவ்வியம் பேசா அருந்தமிழ் அண்ணலவர்
ஒவ்விய வாழ்வை உயர்வான ஓவியமாய்
நாளும் நினைந்தே நயந்து வணங்கினால்
மூளுமே அன்னாரின் முனைப்புடன் ஆராய்ச்சி
பொலிந்தென்றும் வாழ்ந்திடலாம்! அய்யகோ! அந்தோ!
நலிந்ததே நெற்குப்பை நாற்றங்கால்!

பேரா. தெ.முருகசாமி
மேனாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க்கல்லூரி,
காரைக்குடி.

# முத்தொள்ளாயிரத்தில் உவமைகள்

முனைவர் **பா.நேருஜி**
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

முத்தொள்ளாயிரம் இடைக்காலத்தில் எழுந்த இலக்கியக் கருவூலம். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒவ்வொருவரையும் தொள்ளாயிரம் வெண்பாக்களில் புகழ்ந்து பாடும் வீரமும் காதலும் கலந்த அகப்புற இலக்கியம். இப்பழந்தமிழ் நூலின் 110 பாடல்களே இதுவரை கிடைத்துள்ளன. கவிதைக்கு உயிர்த்துடிப்பாய் அமைவன கவினுறு உவமைகள். மழைவளம் இன்றேல் புவிவளம் இல்லை. உவமைகள் இன்றேல் கவிநலம் இல்லை. பொன்போன்ற புதல்விக்கு அன்னை பொட்டிட்டுப் பூவைத்து அழகு பார்ப்பது போல் புலவர்கள் தங்கள் கண் போன்ற கவிதைக்கு உவமையெனும் மெருகூட்டிப் பார்ப்பது இயல்பு. முத்தொள்ளாயிரத்தில் பயின்று வந்துள்ள உவமைகளை எடுத்தியம்பு வதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**வெண்கொற்றக்குடை போன்ற வெண்மதி**

போர்க்களத்தில் பகலில் பகையரசரின் வெண்கொற்றக் குடைகளைப் பற்றிப் புடுங்கிச் சிதைத்து வீசிய யானை, இரவில் வானத்தில் வெண்கொற்றக்குடை போன்று தோன்றிய வெண்மதியை மதிமயங்கிப் புடுங்கி எறியத் தன் துதிக்கையை நீட்டிப் பிளிறியது. இதனை,

செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டும்தன் கை (முத்.பா.6)

என்ற பாடலடி மூலம் அறியமுடிகின்றது. மேலும், பாண்டிய மன்னனின் யானை மேல் குடையானது முழுமதி போல் ஒளி வீசுகிறது. இதனை, நிறைமதிபோல் யானைமேல் நீலத்தார் மாறன் குடைதோன்ற (முத்.பா.61) என்றும் மாறாடுபோர் மன்னர் மதிக்குடையும் செங்கோலும் (முத்.பா.91) என்றும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

**நாடு பற்றியவை**

சோழ நாட்டில் மலர் மாலைகள் விற்பவர்களால் தெருவில் எறியப்பட்ட தரங்குறைந்த, வாடிய வண்ண மலர்கள் சிதறிக்கிடப்பது

வானத்தில் தோன்றும் வானவில் போல காட்சியளித்தது. இதனால் மண்ணகம் விண்ணகம் போன்று காட்சியளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதனை,

வில்பயில் வானகம் போலுமே (முத்.பா.25)

என்ற அடி எடுத்துரைக்கின்றது.

**மன்னர்கள் பற்றிய உவமைகள்**

சேரமன்னன், மலைபோன்று விரிந்த மார்பகலம் கொண்டவன் என்பதனை வரைபொரு நீள்மார்பு வட்கார் (முத்.பா.11) என்ற பாடலடி உணர்த்துகின்றது. சோழன், கிள்ளிவளவன் ஒளிவீசும் இலைபோன்ற நுனியுடைய வேல் கொண்டவன், கல்போன்ற உறுதி மிக்க தோள்களைக் கொண்டவன் என்பது சுடரிலைவேல் சோழன்தன் பாடலம் (முத்.பா.35), கல்லார்தோள் கிள்ளி களிறு! (முத்.பா.28) என்ற பாடலடிகளால் சுட்டப்பட்டுள்ளது. மாறன், செந்தூரம் போன்ற சிவந்த மேனியுடையவன் என்பது சேலேக வண்ணனொடு (முத்.பா.100) என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

**பெண்கள் பற்றிய உவமைகள்**

கண்கள், வேல் போன்ற விழி, வாள் போன்ற விழி, கண்களைப் போல மலர்கின்ற குவளை மலர்கள், கண்கள் வலையில் அகப்பட்ட மீன்கள் புரளுவது போல் உள்ளன என்று பலவாறாகக் கூறப்பட்டுள்ளன. விரல், செங்காந்தள் போன்ற மெல்விரல் என்றும் கண்ணீர்த்துளிகள் முத்துக்கள் போன்றவை என்றும் பருவச்செழிப்பு பனை மரத்தின் குரும்பை போன்று உள்ளது என்றும் பாம்பின் படம் போன்று விரிந்த அழகிய அல்குல் என்றும் கூறப்பட்டுள்ளன.

வேல்கண்ணாய் (முத்.பா.80)

வளையவாய் நீண்டதோள் வாள்கணாய் அன்னை (முத்.பா.83)

நீள்நிலம் கண்தன்மை கொண்(டு) அலறும்

காவிரி நீர்நாட்டு (முத்.பா.34)

நீலவலையில் கயல்போல் பிறழுமே (முத்.பா.35)

செங்காந்தள் மெல்விரலால் சேக்கை தடவந்தேன் (முத்.பா.74)

கருதியார் கண்ணும் படும் (முத்.பா.96)

வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தன போல் (முத்.பா.79)

அரவகல் அல்குலாய் (முத்.பா.37) என்று கூறப்பட்டுள்ளன.

**தெங்கு உண்ட தேரை போல**

தலைவி தோழியிடம், நான் இதுவரை கிள்ளியோடு கூடிக் களிக்கவில்லை. ஆனால், தேரையோடி நோய் கொண்ட தேங்காய், தேரை தின்னாமலே தேரை தின்றுவிட்டதாகப் பழிக்கப்படுவது போல் நானும் வளவனைக் கூடாமலே என் அன்னையாலும் அக்கம் பக்கத்தாராலும் பழிக்கப்படுகிறேன் என்றுரைக்கின்றாள். இதனை,

> **தெங்(கு)உண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்**
> **திண்தேர் வளவன் திறத்து** (முத்.பா.42)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

**கானல்நீர் போல**

அகன்ற பாலைவனத்தில் அலை அலையாக ஒளிரும் கானல் நீரின் நீர்த்தோற்றம் விலங்குகட்கு மயக்கத்தைக் கொடுக்கும். அதுபோல் அன்று சோழமன்னன் மீது நான் கொண்ட ஆசை இன்று கானல் நீராக மாறிவிட்டதே என்று தலைவி தோழியினிடத்துப் புலம்புகிறாள்.

> **வியன்கானல் வெண்தேர்த்**
> **துலங்குநீர் மாமருட்டி அற்று** (முத்.பா.45)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

**நீர் மேல் எழுந்த நெருப்புப் போல**

உடலில் பசலை படர்ந்த பெண்ணின் செவிலித்தாய், "சோழனைப் பார்க்காதே என்று அன்றே குறுக்கிட்டுத் தடுத்தேன். அது நீர் மேல் எழுந்த நெருப்பு உடனே அணைந்துவிடுவதைப் போல என் அறிவுரையும் அவளால் ஏற்றுக் கொள்ளப்படாமல் வீணாகிவிட்டது" என்கிறாள். இதனை,

> நலன்தொலைந்து,
> பீர்மேல் கொளல்உற்ற பேதையர்க்(கு)என் வாய்ச்சொல்
> நீர்மேல் எழுந்த நெருப்பு (முத்.பா.46)

என்ற பாடலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இருதலைக் கொள்ளி போல**

சோழன் உலா வந்தபொழுது கண்கள் அவனைக் காணத்துடிக் கின்றன. ஆனால், பெண்மைக்கே உரிய நாணம் தடுத்து நிறுத்துகின்றது. இவ்வாறு, ஆசையும் நாணமும் என்னை அலைக்கழிப்பது, ஒரு மூங்கில் குழாயின் இருமுனைகளிலும் தீப்பற்றி எரியும் பொழுது அதன் உட்புறம்

சிக்கிக்கொண்ட ஓர் எறும்பு இங்கும் அங்குமாக அலைந்து பரிதவிப்பது போல உள்ளது. இதனை,

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போல (முத்.பா.48)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதே உவமை திருவாசகம் நீத்தல் விண்ணப்பத்திலும் வருகிறது.

**இடியோசை கேட்ட நாகம் போல்**

பாண்டிய மன்னன் தெருவில் வருகிறான் என்ற ஓசை தெருவில் முழங்கும்பொழுது மாற்றரசர்கள் மனக்கலக்கம் அடைந்து அச்சத்தால் நடுங்கி காட்டினுள் ஓடி மறைந்து கொள்கின்றனர். அது கொடிய விஷம் கொண்ட நாகம் இடியோசை கேட்டவுடன் நடுங்கிப் படத்தைச் சுருட்டிக்கொண்டு புற்றுக்குள் புகுந்து மறைவது போல் உள்ளது.

அருமணி ஐந்தலை ஆடரவம் வானத்(து)
உருமேற்றை அஞ்சி ஒளிக்கும் செருமிகுதோள் (முத்.பா.56)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொன்னுரைக் கல் போல குதிரையின் குளம்புகள்**

போர்க்களத்தில் தரையில் வீழ்ந்து கிடந்த பகையரசர்களது மணிமுடிகளை, மாறனின் குதிரைகள் தமது குளம்புகளால் ஏற்றிச்சென்றன. அவ்வாறு பொன்னாலாகிய பல மணிமுடிகளை இடறிச்சென்றதால் அவற்றின் குளம்புகள், பொன்னை உரசிச் சரிபார்க்கும் உரைகல் போன்று பளிச்சிட்டன. இதனை,

முன்முன்னா வீழ்ந்த முடிக ளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு. (முத்.பா.63)

என்ற பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன.

**யானை பற்றிய உவமைகள்**

மந்தர மலை போன்ற பெரிய யானையின் பாதங்கள் உடுக்கை, செவி கேடயம், அவை, தனது கொம்புகளை எழுத்தாணியாக மாற்றி, பகை மன்னர்களின் அச்சம் தரக்கூடிய மார்புகளை ஓலையாக மாற்றி, இந்த மாநிலம் எங்கள் மாறனுக்கே சொந்தம் என எழுதியது எனக் கற்பனை அழகுடன் பாடப்பட்டுள்ளது. சீற்றம், கடலில் ஏற்படும் பொங்கும் கடும் புயல் போன்றது, கன்னங்களில் வடியும் மதநீர் மழைநீர் போன்று உருண்டோடி வழிந்து கொண்டே இருக்கும். புயற்காற்றைப் போல போர்க்களத்தில் பாய்ந்து செல்லக்கூடியது. பனிக்கடலுள் நாவாய் போன்று போர்க்களத்தில் தோன்றக்கூடியது எனப் பலவாறு

கூறப்பட்டுள்ளது. இதனை,

துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்... (முத்.பா.100)

மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார் (முத்.பா.32)

வேற்றார் அகலம் உழுமே மற்றேனையது. (முத்.பா.65)

தோற்றம் மலைகடல் ஓசை புயல்கடாம். (முத்.பா.66)

பனிக்கடலுள் பாய்ந்தோய்ந்த நாவாய்போல் தோன்றுமே (முத்.பா.27)

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது.

**வேடன் வெறுங் கூட்டைக் காவல் காப்பது போல**

பாண்டியனிடம் தன் இதயத்தைப் பறிகொடுத்த பெண்ணின் அன்னை அவளை வீட்டிற்குள் அடைத்து வைத்தாள். அதற்கு அவள், தனது நெஞ்சு தன்னிடமிருந்து தரணியாளும் பாண்டியனை அடைந்து விட்டது. இதனை அறியாது தாய் செய்யும் இச்செயல் கூட்டை விட்டுக் காடை பறந்து சென்ற பின், அதனை அறியாத வேடன் வெறுங் கூட்டை மட்டும் காவல் காப்பது போன்ற பேதைமைத் தன்மையாக உள்ளது என்று நகைக்கிறாள்.

கூட்டே குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை

வெறுங்கூடு காவல்கொண்டாள். (முத்.பா.85)

என்ற பாடலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அலை வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் சங்கு போல**

கடல் அலையால் அடித்து வரப்பட்ட சங்கொன்று மணல் மேட்டில் ஏறி ஒளி பொருந்திய முத்தினை ஈன்ற பின்னர் மீண்டும் கடலுக்குள் செல்வதற்காகப் பேரலை ஒன்றை எதிர்நோக்கியுள்ளது. இதனைக் கண்ட பாண்டியனிடம் மனதைப் பறிகொடுத்த பெண்ணொருத்தி தன் காதல் நெஞ்சும் தூதை எதிர்நோக்கியுள்ளது என்று எண்ணுகிறாள். இதனை,

திரைவரவு பார்த்திருக்கும் தென்கொற்கைக் கோமான்

உரைவரவு பார்த்திருக்கும் நெஞ்சு (முத்.பா.90)

என்ற பாடலடியால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இக்கட்டில் சிக்கிய பெண்மான் போல**

மாறனைத் தேடி அவனது மாளிகையை அடைந்த மங்கையின் நெஞ்சு ஒரு பெண்மானுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. வேடர்களால் விரட்டப் படும் ஒரு பெண்மான் உடலில் அம்பு தைத்து ஆற்றங்கரையின் தாழ்வான ஒரு புதரில் ஒளிந்துகொண்டது. அதற்கு அம்பினால் ஏற்பட்ட

வேதனை, வெள்ளம் வந்துவிடுமோ என்ற அச்சம், வேடர்களும் அவர்களது வேட்டை நாய்களும் இடும் ஓசை, இத்தனைக்கும் நடுவே அந்தப் பெண்மான் எத்துணை கலக்கத்துடன் மலங்க மலங்க விழித்த வண்ணம் நின்றிருக்குமோ அது போலவே ஒரு பெண்ணின் நெஞ்சும் மயங்கிக் கலங்கி நின்றதாகக் கூறப்படுகின்றது. இதனை,

**ஏமான் பிணைபோல நின்றதே கூடலார்**

**கோமான்பின் சென்றவென் னெஞ்சு.** (முத்.பா.92)

என்ற பாடலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாட் போல**

மகிழ்ச்சி மிக்க பிறந்த நாள், நோய் வாய்ப்பட்டிருக்கும் காலத்தில் வருவது துன்பத்தை மிகுவிப்பது ஆகும். மயக்கம் தரும் மாலைப் பொழுதில் வீசும் வாடைக்காற்றும் கடுஞ்சினம் கொண்டவர்களைப் போல் உடலில் தைத்து உயிரை வருத்துகின்றது.

**பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாட் போல**

**சீறியோர் வாடை சினந்து.** (முத்.பா.93)

என்ற பாடலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குடத்து விளக்கொளி போல, மலைத் தீப்போல**

பூங்கொம்பு போன்ற பெண்டிரின் காமம் குடத்தில் இடப்பட்ட விளக்கொளி போல் மறைந்தே இருக்கும். ஆனால், பாண்டிய மன்னன் உலா வரும்போது மாலை நேரத்தில் மலையில் தோன்றும் தீயைப்போல் ஊரார் அனைவரின் கண்களிலும் படும்படி வெளிப்பட்டுவிடும். இதனை,

குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்...

ஆபுகு மாலை யணிமலையில் தீயேபோல் (முத்.பா.104)

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**காவலனே கள்வனாக மாறிவிட்டது போல்**

தலைவி, எங்கள் வீதி வழியே உலா வந்த பாண்டிய மன்னன் என் தோள் அழகைப் பறித்துக்கொண்டு சென்றுவிட்டான். இது, காவலனே கள்வனாக மாறிவிட்டது போல் உள்ளது என்கிறாள்.

கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்

யார்க்கிடுகோ பூச லினி? (முத்.பா.105) என்ற பாடலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு குழந்தைக்குப் பாலையும் மற்றொரு குழந்தைக்கு நீரையும் அருந்தக் கொடுப்பது போல

தலைவி, அரசன் அனைவருக்கும் அருள் புரிகிறான். எனக்கு மட்டும் ஏன் அருள் புரியவில்லை? இது ஒரு கண்ணில் வெண்ணையும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போலவும் ஒரு குழந்தைக்குப் பாலையும் மறு குழந்தைக்கு நீரையும் அருந்தக்கொடுப்பது போல உள்ளது என்கிறாள். இதனை,

சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு (முத்.பா.106)

என்ற பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன.

**பழி ஒருபக்கம் பாவம் ஒரு பக்கம்**

கன்று புல்லை மேய்ந்ததற்கு நிலத்தின் உரிமையாளன் எதிரே வந்த கழுதையின் காதுகளை அறுத்துவிட்டான். கன்று செய்த தவறுக்குக் கழுதை பலியானது போல வழுதியைக் கண்டவை கண்கள், கண்கள் செய்த தவறுக்குத் தோள்கள் பசலையால் தண்டிக்கப்படுகின்றன. இது பழி ஒருபக்கம் பாவம் ஒரு பக்கம் என்ற உவமையால் உணர்த்தப் பட்டுள்ளது. இதனை,

கண்டநங் கண்கள் இருப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னோ பசப்பு (முத்.பா.109)

என்ற பாடலடிகளால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

முத்தொள்ளாயிரத்தின் உவமைகள் அனைத்தும் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் ஒப்புமைகளுடன் படைக்கப்பட்டுள்ளன. பயில்வோரின் நெஞ்சங்களை எளிதில் ஈர்க்கும் வகையில் எளிய சொற்களே அமைந்துள்ளன. பாலுக்குச் சர்க்கரைபோல், மாடமாளிகைச் சித்திரம் போல், வைகறையில் தெளிவாகத் தெரியாத காட்சிகளை கதிரவன் ஒளி விளக்குவதைப் போல நயமுற உவமைகள் இடம் பெற்றுள்ளன. உவமைகள் தற்காலத்திய இலக்கிய ஆர்வலர்களுக்கும் பயில்வோர்க்கும் படைப்பாளர்களுக்கும் முருகியல் தன்மையினை எடுத்தியம்பக் கூடியனவாக அமைந்துள்ளன.

# மணிமேகலையில் சாங்கியத் தத்துவம்

**சி.கலியமூர்த்தி**
முனைவர்பட்ட ஆய்வாளர்

பண்டைய தமிழ் இலக்கியங்கள் பல்வேறு காலங்களுக்கு ஏற்பப் பல்வேறு மாறுதல்களுடன் கூடிய இலக்கிய வடிவங்கள் பெற்று மாற்ற மடைந்தே வந்துள்ளன. தமிழ் இலக்கிய வரிசையில் காப்பியங்களும் ஒரு குறிப்பிடத் தக்க இடத்தினைப் பெற்றுள்ளன. தமிழிலக்கியப் பரப்பில் முதல் சமயக் காப்பியம் மணிமேகலையே ஆகும். இந்தியத் தத்துவம் சார்ந்த கருத்துக்களைச் சாத்தனார் எவ்வாறு தன்னுடைய நூலில் பதிவு செய்துள்ளார் என்பதை அறியலாம். மணிமேகலைக் காப்பியத்தில் சமயக் கணக்கர் தம் திறம்கேட்ட காதையில் பல்வேறு தத்துவங்களை எடுத்து இயம்பியுள்ளது சிறப்புக்குரியதாக அமைகின்றது. ஆகவே, சாத்தனார் கூறும் சமயத் தத்துவங்களில் ஒன்றான சாங்கியத் தத்துவத்தினைப் பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

**தத்துவம் - பொருள் விளக்கம்**

'தத்துவம்' என்ற சொல்லைத் "தத்+துவம்=தத்துவம் என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். 'தத்' என்ற வடசொல் 'அது' என்று பொருள்படும். 'துவம்' என்பதற்குத் 'தன்மை' என்பது பொருளாகும். பிரபுத் தன்மை, சகோதரத்தன்மை என்னும் பொருளில் பிரபுத்துவம், சகோதரத்துவம் என்னும் சொற்கள் வழங்குதலைக் காணலாம். 'துவம்' என்னும் விகுதி பண்புப்பொருள் பயத்தலின் 'தத்துவம்' என்ற சொல் 'அதன் தன்மை' எனப் பொருள்படும். 'அது' என்னும் சுட்டுப்பெயர் சமயம் தோறும் வேறு பொருளைக் குறிக்கும். ஆதலின், பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலைக்குத் 'தத்துவம்' என்னும் குறியீடு வழங்கப்பட்டது என்று கொள்ளலே ஏற்புடையதாகும்"[1] என்கிறார் ந.சுப்புரெட்டியார். ஆகவே தத்துவம் என்பதனை உயர்ந்த சிந்தனையின் வெளிப்பாடு என்று கருதலாம். மேற்கண்ட கருத்தினையே சோ.ந.கந்தசாமியும் தத்துவத்திற்கான விளக்கமாகத் தருகிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில், "இந்தியத் தத்தவம் என்பது இந்தியத் திருநாட்டில் இந்திய அறிஞர்களாலும் ஞானிகளாலும் உருவாக்கப்பட்ட மெய்ப் பொருளியலைச் சுட்டுவதாகும். இந்தியப் பண்பாட்டின் படைப்புக்களில் தத்துவம் சிறப்பிடம் பெறுகின்றது. மக்களின் நடைமுறை வாழ்வியல், அனுபவங்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மரபுவழி

வந்த தகவுகள், அளவியல், அழகியல், மனவியல், அறிவுத்திறம், சிந்தனைத்திறம், புலன் கடந்த காட்சிகள் ஆகியவற்றின் அடித்தளத்தின் மேல் இந்தியத் தத்துவம் என்னும் எழில் மாளிகை எழுப்பப் பெற்றுள்ளது"[2] என்கிறார்.

"உலகு (ஜடம்), உயிர் (ஆன்மா), இறை (பிரம்மம்) ஆகிய முப் பொருள்கள் பற்றியும் அவற்றின் தொடர்புகள் பற்றியும், படைப்பு (சிருஷ்டி) பற்றியும், மரணத்தின் பின்னைய மனிதநிலை, மறுபிறப்புப் பற்றியும் இந்தியத் தத்துவ ஞானம் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ந்துள்ளது. வெறும் நம்பிக்கைகளைக் கொண்டோ, முன்னோர் மொழியைப் போற்றுதலோ இன்றி தருக்க ரீதியான பகுத்தறிவு கொண்டும் ஆராய்கின்ற தத்துவஞானமே இந்தியத் தத்துவஞானம்"[3] என்பார் மு.கு.ஜகந்நாத ராஜா. ஆகவே, இந்தியாவில் பல்வேறு வகையான தத்துவ மரபுகள் இருந்து வந்துள்ளன என்பதை இதன் மூலம் அறியமுடிகின்றது.

**சாங்கியம் - சொல் விளக்கம்**

"சங்க்யா" என்ற தாதுவிலிருந்து சாங்கியம் என்ற சொல் தோன்றியது. இத்தாதுவிற்குப் பகுத்தறிதல், எண்ணுதல் (Reasoning, number) எனப் பல பொருள் உண்டு"[4] என்பார் சோ.ந.கந்தசாமி. சாங்கியம் என்ற பெயர் தோன்றக் காரணம் என்ன என்பது பற்றியும் பல கருத்துக்கள் உள்ளன. சாங்க்யா என்ற வடசொல்லுக்கு எண்ணிக்கை என்று பொருள். ஜனசங்கியை என்பது மக்கட்தொகைக் கணக்கெடுப்பு என்று பொருள்படும். இந்தியத் தத்துவத்தில் இருபத்தைந்து தத்துவமாக எண்ணிக்கையில் பகுத்ததால் சாங்கியம் என்ற பெயர் பெற்றதென்பர். சாங்கியம் என்பதற்கு விவேகம், பகுத்தறிவு, தருக்கஞானம் என்று பல பொருட்கள் உண்டு. பிரகிருதி - ஜீவர்கள் வேறு வேறு எனும் ஞானம் பெற்று வீடு பேறடைய வற்புறுத்துவதால் இப்பெயர் பெற்றதென்பார்"[5] மு.கு.ஜகந்நாத ராஜா.

சாங்கியம் என்றால் எண்ணிக்கை என்று ஒரு பொருளுமுண்டு. அதாவது இருபத்து நான்கு எனத் தத்துவங்களின் எண்ணிக்கை கூறப்படுவதாலும் இந்தப் பெயர் வந்தது எனலாம். "சாங்கியம் என்றால் 'புத்தி' என்றும் பொருள்"[6] உண்டு என்கிறார் ஸ்வாமி. 'சாங்கிய' என்ற சொல் சங்கிய' என்ற பகுதியினின்று உண்டானது. 'சங்கிய' ஒன்று, இரண்டு மூன்று... என எண்ணுவது. எந்த விஞ்ஞானத்துக்கும் பொருளைப் பகுத்து அளவிட்டு பொருட் கூறுகளை ஆராய்தல் அவசியம். எண்ணிக்கை, அளவு, எடை, கால பரிணாம அறிவு இல்லாவிட்டால் விஞ்ஞானம் வளராது. 'சாங்கியம்' எண்ணி ஆராயும் சாஸ்திரம். ஆராய்ச்சிக் 'காரணகாரிய அறிவு"[7] என்கிறார் வெ.கோவிந்தசாமி.

சாங்கியம் என்ற சொல்லின் பொருள் நிச்சயமற்றதாக இருக்கிறது. இத்தத்துவத்தின் தோற்றம் பற்றி ஊகங்கள் மட்டுமே உள்ளன. கபிலர் என்பவரே இதன் கர்த்தா என்று கூறப்படுகிறது. ஆனால் அவரைக் குறித்துக் கூறப்படும் பல்வேறு கட்டுக் கதைகள் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன"[8] என்பர். ஆகவே சாங்கியத் தத்துவம் முற்காலத்தில் தோன்றியது என்றும் பிற்காலத்தில் தோன்றியது என்றும் இரு வகைகளில் குறிப்பிடுகின்றார். சாங்கியர்கள் கடவுளை நிராகரித்தார்கள், "கனவுநிலை, கனவுக்கு அப்பாற்பட்ட நிலை என்று மூழ்கி அவர்கள் இக் கேள்விக்கு விடைதர முயலவில்லை. தர்க்க ரீதியான பதிலை அளிக்க முயன்றார்கள். காரண, காரியத் தொடர்பு என்ன என்ற கேள்வியைத் தங்கள் தத்துவத்தின் தொடக்கமாகக் கொண்டனர்.

"சிந்தனை வரலாற்றில் எந்த ஒரு தத்துவமும் தனி ஒருவனின் படைப்பன்று. முன்பே காலந்தோறும் வாழ்ந்த சிந்தனையாளர்கள் ஆராய்ந்து விட்டுச் சென்ற எண்ணச் சிதறல்களின் ஒட்டுமொத்தமே, பிற்காலத்தில் அறிவு முதிர்ந்த ஒருவரின் மனவழியாய் முழுமைபெற்று வெளிப்படுகிறது என்றார் டாக்டர் கிருட்டிணனார்."[9] இக்கருத்தின்படி கபிலரின் சாங்கியக் கொள்கைக்குரிய வித்தும் வேரும் முன்னமே இருந்துள்ளதனை அறியலாம்.

**சாங்கியத்தின் பெயர்கள்**

நியாயவைசேடிகம் போலவே சாங்கியமும் ஆன்மாக்கள் பல என்னும் கருத்தையும், மனத்தின் வேறாக மனம் உணர்ந்து கொள்ளுதற் குரியதாய்ப் புறத்தே தோன்றும் பொருள்களின் உண்மையினையும் ஏற்றுக் கொண்டதால் அதனைப் பொருள்முதல் வாதம் (Realism) என்பர். உலகம் இறைவனிடமிருந்து தோன்றியது என்ற படைப்புக் கொள்கையைச் சாங்கியம் ஏற்கவில்லை. பிரகிருதியாகிய ஒரே மூலத்தினின்று உலகம் இயல்பாகவே பரிணாமம் எய்தியது என்று சாங்கியம் சாற்றியதால் அதற்குப் பரிணாமவாதம் என்றும் சுபாவவாதம் கபிலதரிசனம் என்றும், இறைவனை உலகத் தோற்றத்திற்குத் தேவையில்லை என்றதால் நிரீச்சுர சாங்கியம் என்றும், சாங்கியத்தினை, 'துவைதம்' என்றும் கூறும் மரபு உண்டு என்பர். உலகம் பிரகிருதியாகிய உள்பொருளிலிருந்து தோன்றியது என்பதால் சாங்கியத்தினைச் 'சற்காரியவாதம்' என்றும் அழைப்பர்.

**மணிமேகலையில் சாங்கியம்**

மணிமேகலையில் சமயக் கணக்கர் தம் திறங்கேட்ட காதையில் சாங்கியன் ஒருவன் சாங்கியத் தத்துவத்தின் பரிணாம வாதத்தை மணிமேகலைக்கு விளக்கிக் கூறுகிறான். இச்சாங்கியத் தத்துவம் பூர்வ சாங்கியமாகவே தோன்றுகிறது. சாரக சம்கிதையிலிருந்தும் பண்டைய

பௌத்த நூல்களிலிருந்தும் நமக்குக் கிடைக்கும் இத் தத்துவத்தின் சித்திரத்தை மேலும் கொஞ்சம் விளக்கமாகவே மணிமேகலையில் காண்கிறோம். சாத்தனார் தமது பௌத்தக் கொள்கைகளுக்கு ஏற்பத் தமது தத்துவத்திற்கு மாறுபட்ட சாங்கியத்தைத் திரித்துக் கூறவில்லை. பண்டைய சாங்கியத் தத்துவத்தின் பழைய உருவத்திலேயே அதனை விளக்கியுள்ளார். எனவே பரிணாமவாதத்தை மேலும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

"இது சாங்கியமத மென்றெடுத் துரைப்போன்
தனையறி வரிதாய்த் தான்முக் குணமாய்
மனநிகழ் வின்றி மாண்பமை பொதுவாய்
எல்லாப் பொருளுந் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதன் மூலம் பகுதிசித் தத்து
மானென் றுரைத்த புத்தி வெளிப்பட்
டதன்கணா காயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட் டதன்க ணங்கி
தன்மை வெளிப்பட் டதின்மண் வெளிப்பட்
யானது வெளிப்பட்டு அதன் கண்அப்பின்
டவற்றின் கூட்டத் தின்மனம் வெளிப்பட்
டார்ப்புறு மனத்தாங் கார விகாரமும்
ஆகாயத்தின் செவியொலி விகாரமும்
. . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . .
ஒன்றா யெங்கும் பரந்துநித் தியமாய்
நின்றுள வுணர்வாய் நிகழ்தரும் புருடன்"

(மணி.காதை.27, பா.அடிகள். 202–232)

என்று மணிமேகலையில் சாத்தனார் விளக்கும் பரிணாமவாதம் மிகவும் தெளிவாக இருக்கிறது. இதில் பிரபஞ்சம் அனைத்திற்கும் மூலப் பொருளாய் உள்ள பிரதானம் முதலில் வரையறுக்கப்படுகிறது. அது அவியத்தமாய் இருப்பதால், அதனை அறிய இயலாது. அது தானே முக்குணமாய் இருந்தது. அது மனத்தில் நினைவுக்கிடமாகாது. பிரிவின்றிப் பொதுவாய் இருந்தது. எல்லாப் பொருளும் தோன்றுதற்கிடமாய் இருந்தது. இது மூலப்பகுதி. வேறெந்த நூலும் கூறாத ஒன்றைச் சாத்தனார் கூறுகிறார்.

சாங்கியம் பற்றிய கருத்துக்கள் பலவாறாக இருப்பினும் இன்றைய சாங்கியதத்துவம் என்று அழைக்கப்படுவது. "கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் சாங்கியரான ஈஸ்வர கிருஷ்ணரும் அவருக்குப் பின்வந்த சாங்கியர்களும் புருஷர்கள் என்ற தத்துவத்தை இப்பரிணாமத் திட்டத்தினுள் நுழைத்தனர்."[10] அதாவது பிரபஞ்சத்தின் முதற்காரணம் அறிவு அல்லது உணர்வு அல்ல. அது அசேதனப் பொருள் (ஜடப்பொருள்). பரிபூரணக்

கருத்து முதல்வாதியான சங்கரர் முழுமையான பொருள் முதல்வாதமான சாங்கியத்தைத் தம்முடைய கொள்கையின் முதல் எதிரி என்றார். அவருடைய நூல்களில் "பிரதானமல்லா"[11] எனச் சாங்கியத்தை அழைத்தார்.

உலகத் தோற்றத்துக்கு மூலகாரணமான பகுதியின் இலக்கணத்தைச் சாங்கிய காரிகை கூறுகிறது. பகுதியின் ஒருமை மிகவும் அருவமானது. முக்குணமயமே மூலப்பகுதி. எனவே ஆற்றலும் சடமெனப்படுகின்றது. அதிலிருந்து கதிர்கள் வெளிப்படுகின்றன. அது பரிணமிக்கும் பெற்றியது. ஆற்றலின் இயல்புகள் யாவை? எனில், தடையை வெல்வது, இயங்குவது, இயக்கத்தை உண்டாக்குவது என்பன காரண இயக்கம் அறிதற்குரிய நுட்பச் சான்று ஆகும்.

**முடிவுரை**

சாங்கியம் கூறும் மூன்று உண்மைகள். முதலாவது காரண காரியத் தொடர்பு. இரண்டாவது ப்ரக்ருதி (இயற்கை) அனைத்துக்கும் ஆதார மானது. எல்லாச் சக்திகளையும் கொண்ட பண்புகளையும் தன்னிடத்து உடையது. மூன்றாவது புருஷன். அதாவது இதனைச் சுட்டிக்காட்ட இயலாது. பண்டைக் காலத்திலேயே இதுபோன்ற இயற்கைத் தத்துவங்கள் இருந்ததனை மணிமேகலைக் காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது. பிற்காலத்தில் சாங்கியத்தின் நிலை வேறொரு தத்துவத்தின் கீழ் இணைக்கப்பட்டு இயங்கியது என்பதனையும் அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. ந.சுப்புரெட்டியார், அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம், ப.64.
2. சோ.ந.கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி-2, பக்.14-15.
3. இ.எஸ்.டி.செ.ஞானன், தத்துவ தரிசனங்கள், ப.150.
4. சோ.ந.கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம், ப.11
5. இ.எஸ்.டி.செ.ஞானன், தத்துவ தரிசனங்கள், ப.146.
6. ஸ்வாமி, ஆறு தத்துவங்கள், ப.53
7. வெ.கோவிந்தசாமி, இந்தியத் தத்தவ மரபு, பக்.71-72.
8. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா (தமிழில் லெ.கிருஷ்ணமூர்த்தி), இந்தியத் தத்துவம் ஓர் அறிமுகம், ப.1945.
9. சோ.ந.கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம், ப.14.
10. நா.வானமாமலை, பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும், ப.39.
11. மேலது., ப.39.

# சிற்பக் கலையும் பரிபாடலும்

முனைவர் உ.கருப்பத்தேவன்

**முன்னுரை**

பரிபாடலில் 'திருமால்' பாடல்களில் சிற்பக்கலையின் தாக்கம்' என்னும் பொருளில் அமைந்துள்ள இவ் ஆய்வுக் கட்டுரை, திருமால் குறித்துப் பாடப்பெற்றுள்ள பாடல்களில் இடம் பெற்றுள்ள சிற்பங்கள் மற்றும் சிற்பக்கலையின் கூறுகளை விளக்கமாக ஆராய்வதாக அமைகின்றது.

**தமிழ் இலக்கியங்களில் திருமால்**

சங்க இலக்கியங்களில் திருமாலைப் பற்றிய குறிப்புகள் மிகுதி. திருமாலை மாயோன், நீனிற உருவின் நேமியோன், காரிருள் மயங்குமணி மேனியன், திருமருமார்பினன், முந்நீர்வண்ணன், பூவைப்பூ வண்ணன், பொருகடல் வண்ணன், ஆழ்கடல் வண்ணன், பூவைப் புதுமலர் வண்ணன், கடல் வண்ணன், மயிலெடுத்து உறழ்மேனி மாயவன், மாமணி வண்ணன், பாம்பணைப்பள்ளி அமர்ந்தோன், அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த மணிவண்ணன், அரவணைக் கிடந்தோன், துளவம் சூடிய அறிதுயிலோன், சக்கரத்தான், நேர்கதிர் நிமிர்த்த நேமியஞ்செல்வன், பொன்னணிநேமி வலங்கொண்டு ஏந்திய மன்னுயிர் முதல்வன், செருமிகு திகிரிச் செல்வன், செருமிகு நேமியான் என்று திருமாலை இலக்கியங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. இவற்றில் பரிபாடல் காட்டும் திருமால் பற்றிய தொன்மச் செய்திகள், சிற்பக் கூறுகள் மட்டுமே இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாகின்றன.

**திருமாலின் நின்றகோலம்**

பரிபாடலில் நல்லெழுநியார் என்னும் புலவர் பாடிய 'திருமால்' குறித்த பாடலில் (பா.எண். 13: 113) திருமாலைத் தொழுவார் பெறும் பேறுகளை விளக்க வந்த புலவர் திருமாலின் நின்ற கோலத்தைச் சிற்பக்கலை நுணுக்கத்தோடு வருணித்துள்ளார்.

திருமால் அணிந்துள்ள பீதாம்பரம் ஞாயிற்றின் ஒளிபோன்று பேரொளி உடையது. அவன் தலையில் புனைந்துள்ள பொன்முடி ஞாயிறுபோன்ற அழகுடையது. அவன் கழுத்தில் சூடிய மாலை அருவி போன்றது. அவன் கருடக்கொடியைக் கையில் ஏந்தியவன். அவன்

நிலவைப்போன்று உலகம் முழுவதையும் காணும் தண்ணளியை உடையவன். அவன் கையிலுள்ள சக்கரப்படையும் சங்கும் ஞாயிறும் திங்களும் போன்றன ஆகும். மின்னலைப் போன்ற பொன்மாலையையும் முத்தாரத்தையும் அவன் அணிந்துள்ளான். திருமாலின் நின்றகோலத்தை விளக்க வந்த புலவர் ஞாயிறு, திங்கள், மழை அவனுள் அடங்கியது என்கின்றார். அப்பொருட்களின் தன்மையே திருமாலின் தன்மை என்கின்றார். இத்தகைய நின்றகோலத்தில் வீற்றிருக்கும் திருமாலைத் தொழுது வழிபடுவோர் சொர்க்கத்தை அடைவர் என்கின்றார் புலவர். அப்பாடலடிகள் வருமாறு

"மணிவரை ஊர்ந்த மங்குல் ஞாயிற்று
அணிவனப்பு அமைந்த பூந்துகில் புனைமுடி
இறுவரை இழிதரும் பொன்மணி அருவியின்
நிறனொடு மாறும்தார், புள்ளுப் பொறிபுனை கொடி,
விண்ணளி கொண்ட வியன்மதி அணிகொளத்
தண்ணளி கொண்ட அணங்குடை நேமிமால்!
பருவம் வாய்த்தலின் இருவிசும்பு அணிந்த
இருவேறு மண்டிலத்து இலக்கம்போல,
நேமியும் வளையும் ஏந்திய கையான்
கருவி மின்அவிர் இலங்கும் பொலம்பூண்
அருவி உருவின் ஆரமொடு, அணிந்த நின்
திருவரை அகலம், தொழுவோர்க்கு
உரிதமர் துறக்கமும் உரிமை நன்கு உடைத்து"

(பரிபாடல், திருமால், பா.எண். 13: 1-13)

மேலும், சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையிலும் பரிபாடல் கூறும் திருமாலின் நின்றகோலம்,

"மின்னுக்கொடி உடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நளங்கிள ராரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன்" (சிலப். 11: 45-50)

என்று இப்பாடலடிகளின் கருத்திற்கேற்பவே கூறப்பெற்றுள்ளது. பரிபாடல் கூறும் இத்திருமாலின் நின்றகோலத்தின் தாக்கம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாடல்களிலும் பரவலாகப் பதிவாகியுள்ளது. இதற்குச் சான்றாகப் பின்வரும் பாடலடிகளைக் குறிப்பிடலாம்.

**"துன்னுசூழ் சுடர்ஞாயிறும் அன்றியும், பல் சுடர்களும் போல்**
**மின்னுநீள் முடி ஆரம்பல் கலன் தான்உடை எம்பெருமான்"**

**(நாலா.பா.எண். 3760)**

**திருமாலின் வடிவங்களும் அவதாரங்களும்**

அ) திருமால், ஆயிரம் தலைகளைக் கொண்ட ஆதிசேடனாகிய பாயற்பள்ளியில் அறிதுயில் கொண்டவன்; அந்நிலையில் அவன் திருமால் எனப்பெயர் பெற்றான்.

ஆ) கலப்பைப் படையைக் கையிலேந்திப் (நாஞ்சிலோன்) பகைவர்களைக் கொன்ற நிலையில் அவன் பலதேவனாக வடிவம் பெற்றான்.

இ) மண்ணுலகம் முழுவதும் அரக்கனால் கடலில் மூழ்கடிக்கப்பெற்ற போது வராக உருக்கொண்டு (பன்றி), மண்ணுலகைத் தன் ஒற்றைக் கொம்பினால் நெம்பிக் கொணர்ந்த நிலையில் திருமால் வராக அவதாரத் தோற்றம் கொண்டான் (பரிபாடல், திருமால், பா.எண்: 13: 2627). இதில் 'அறிதுயிலோன்' என்பது பாற்கடல் பரமன்; 'நாஞ்சிலோன்' என்பது பலதேவன்; 'களிறு' என்பது ஆதிவராகமூர்த்தி; 'ஒருவன்' என்பது பரமபதப்பரமன்.

முன்னொரு காலத்தில் இரணியாட்சகன் என்ற அரக்கன், பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலில் சென்று மறைந்து கொண்டான். திருமால் வராக வடிவம் கொண்டு அதன் கோட்டால் குத்தி பூஉலகை வெளிக் கொணர்ந்தான். இதனை "என்ன மாயமிவை ஏனமாய் மண்ணிடந்தாய்" (கம்ப.ஆரணிய, பா.எண்.60:4) என்றார் கம்பர். பலராமன் கண்ணனுக்குத் தமையன் ஆவான்; திருமாலின் எட்டாம் அவதாரமே பலராமன் அவதாரம் ஆகும். பலராமனிடம் ஆதிசேடன் அம்சமும் கலந்திருந்தது. வாசுதேவனின் மனைவியாகிய தேவகியின் கருவில் ஆறு திங்களும், உரோகிணியின் கருவில் ஆறுதிங்களும் இருந்து பிறந்தவன். பலராமனை,

**"மாயுடை மலர் மார்பின் மையில் வாள்வளை மேனி**

**....... .... ..... ........**

**வாய் வாங்கும் வளை நாஞ்சில் ஒருகுழை ஒருவனை"**

**(பரி.திருமால்.பா.எண். 1:35)**

எனவும்,

**"வானுற ஓங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப் பானிற வண்ணன்"** எனவும் சங்கத்தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன. (கலி.104)

பலராமன் ஆதிசேடனின் அவதாரம் என்பதை, அவன் மார்பில் புரளும் வெண்கடப்ப மாலைபோன்று திருமாலிருஞ் சோலையில் விளங்கியது. திருமாலிருங்குன்றம் தன்னிடத்துத் தோன்றிய சிலம் பாற்றினால் சிறப்புப் பெற்றது.' (பரிபாடல், திருமால், பா.எண். 15: 19-29) என இளம்பெருவழுதியார் பாடிய திருமால் குறித்த பரிபாடலும் விளக்குகின்றது.

மாயோனாகிய திருமால் வீற்றிருக்கும் திருமாலிருஞ்சோலைக் குன்றம், வேங்கை மரத்தில் பூக்கும் ஒளிபொருந்திய பூங்கொத்துக்களால் மாயோனை ஒத்தது எனவும் சிறப்பிக்கப்பெறும்.

**"சுனையெலாம் நீலம் மலர, சுனை சூழ்**
**சினையெலாம் செயலை மலர, காய்கனி**
**உறழ நனை வேங்கை ஒள்இணர் மலர**
**மாயோன் ஒத்த இன் நிலைத்தே"** (பரி.15:30-33)

**திருமாலின் நிறம், வடிவம்**

திருமால் குறித்து நல்லெழுநியார் பாடிய பாடலில் திருமாலின் நிறம்,

**"சேவல் ஓங்கு உயர்கொடிச் செல்வ! நல் புகழவை;**
**கார், மலர்ப்பூவை, கடலை, இருள், மணி**
**அவை ஐந்தும் உறழும் அணிகிளர் மேனியை"** (பரி.13:41-43)

எனக் குறிக்கப்பெறுகின்றது. திருமால் கடல் போலவும், காயாம்பூப் போலவும், இருள்போலவும், மேகம் போலவும், கருநிறமுடையவன்; திருமாலைக் குறித்த வண்ண ஓவியம் வரைவார்க்கு இக்குறிப்பு பெரிதும் பயன்பாடுடையதாக அமையும். திருமாலின் திருமேனி நீலமணியைப் போன்றது என்பதைக் கடுவன் இளவெயினனார்,

**"மாஅயோயே! மாஅயோயே!**
**மறுபிறப்பு அறுக்கும் மாசுஇல் சேவடி**
**மணிதிகழ் உருவின் மாஅயோயே"** (பரி.3:1-3)

எனக் குறிப்பிடுகின்றார். 'மாயோன்' என்பது 'கருநிறமுடையோன்' எனச் சுட்டாமல் 'திருமால்' என்ற பெயரை உணர்த்துகின்றது. திருமால் கருநிறம் உடையவன் ஆதலின் மாயன், மாயோன் என அழைக்கப்பட்டான். "கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே"

(சிலம்பு. ஆய்ச்சியர் குரவை) என்னும் பாடலடி இதற்குச் சான்றாகும்.

**கருடன், வினதையின் துன்பம் போக்கிய தொன்ம வரலாறு**

கடுவன் இளவெயினனார் திருமால் குறித்துப் பாடிய பரிபாடலில் (பரி.3:15-30) கருடன் தன் தாயாகிய வினதையின் துன்பம் போக்கிய தொன்ம வரலாற்றைக் குறித்துள்ளார். இந்திரனின் குதிரைவால் தூய வெண்ணிறம் என்றாள் வினதை. அதனைக் கேட்ட கத்துரு என்பவள் அக்குதிரையின் வால் கரியது என்றாள். கரியதாயின் நான் உனக்கு அடிமை என்றாள் வினதை. கத்துரு தன் மக்களைக் கொண்டு சூழ்ச்சியால் அக்குதிரையின் வாலைக் கருமை ஆக்குகின்றாள். வினதை, கத்துருவுக்கு அடிமையானாள். தேவாமிர்தத்தைக் கவர்ந்து தனக்குத் தந்தால் வினதையை விடுவிப்பதாகக் கத்துரு கூறினாள். இச்செய்தியைத் தன் தாயால் அறிந்த கருடன் அமிழ்தத்திற்குக் காவலாக நின்ற தேவர்களை விரட்டிவிட்டு, கத்துருவிடம் அமிழ்தத்தைக் கொடுத்துத் தன் தாயை விடுவித்தான். கருடச்சேவல் திருமாலுக்கு ஊர்தியாகவும் கொடியாகவும் அமைந்த செய்தி பரிபாடலில் பரவலாகக் காணப் படுகின்றது.

கீழ்உலகமாகிய பாதலத்தைத் (பாதல உலகம் ஏழு) தன் திருவடி ஒன்றினால் அளந்தவன் திருமால் என்பது புராணச்செய்தி ஆகும். அதலம், விதலம், கதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதலம் என்பன கீழ் உலகங்கள் ஏழாகும். ஊழிக் காலத்தின் முடிவில் தீயும் எமனும் கூற்றமும் ஞாயிறும் ஒன்று சேர்ந்து உலகத்தை அழிக்கும். புட்கலம், சம்வர்த்தம், ஆவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்னும் ஏழு மேகங்களும் ஒன்று சேர்ந்து பெய்த மழையினால் கடலில் மூழ்கிய நிலப்பரப்பை அச்சத்துடன் கூடிய பன்றி வடிவம் எடுத்துத் தன் கொம்பினால் குத்தி மேலே கொண்டு வந்தவன் திருமால். அவன் ஏழு மேகங்களும் இடைவிடாமல் பெய்த மழைநீரை அன்னச்சேவல் வடிவமெடுத்துத் தன் சிறகுகளால் புலரச் செய்த பெருமைக்குரியவன்.

திருமால் குறித்த இத்தொன்ம வரலாறுகளும் புராணச் செய்திகளும் திருமாலிருங்குன்றத்தின் (அழகர்கோயில்) சிற்பங்களில் சிலைகளாகக் காணப்படுகின்றன. பிற வைணவத் தலங்களின் கோபுரங்களிலும் மண்டபங்களிலும் இச்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

**திருமாலின் மோகினி அவதாரம்**

கூந்தல்மா என்று சொல்லக்கூடிய குதிரைவடிவில் வந்த கேசி என்னும் அரக்கனைக் கொன்றவன் திருமால்; மோகினி அவதாரம் எடுத்து அசுரர்களை அழித்தவனும் திருமாலே. அமரரும் அசுரரும் பாற்கடலைக்

கடைந்து அமிழ்தத்தைப் பெற்றனர். அமிழ்தத்தைப் பகிர்ந்தளிக்கும் போது திருமால் மோகினி வடிவம் எடுத்தான். மோகினியின் அழகில் மயங்கிய அசுரர் அதில் மகிழ்ந்து அமிழ்தத்தைப் பெறமறந்தனர். திருமால் அமிழ்தத்தை அமரர்களுக்கு மட்டுமே அளிப்பதற்கு எடுத்து வந்த அவதாரம் மோகினி அவதாரம்.

இதனைக் கடுவன் இளவெயினனார் என்னும் புலவர்,

**"கூந்தல் என்னும் பெயரொடு கூந்தல்**
**எரிசினம் கொன்றோய்! நின்புகழ் உருவின, கை**
**நகை அச்சாக நல்அமிர்து கலந்த**
**நடுவுநிலை திறம்பிய நயம்இல் ஒருகை"**

**(பரி.3, திருமால், 3:31-34)**

எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

**கருடச் சேவல் திருமாலைத் துதித்த தொன்மை வரலாறு**

திருமாலின் ஊர்தியாகிய கருடச்சேவல் ஆயிரம் தலைகளுடன் நில உலகத்தைத் தாங்கும் ஆற்றலுடைய ஆதிசேடன் என்னும் பாம்பினையே தம் வாயில் தாங்கிக் கொண்ட பேராற்றல் உடையதாகும். அக்கருடன் திருமால் அசுரரை வெல்கின்ற காலத்தில் அவ்வெற்றி திருமாலுடைய தன்று; அவனைத் தாங்கிச் செல்லும் தன்னால் இயன்றது எனத் தருக்கிச் செருக்குடனும் ஆணவத்துடனும் நின்றது. அதன் ஆணவத்தை அழிப்பதற்காகத் திருமால் கருடனிடம் 'நீ என் உடல் முழுவதையும் தாங்க வேண்டாம்; ஒருகையில் சிறுவிரலை மட்டும் சிறிதளவு தாங்கினால் நீ கூறியது உண்மை' என்றார். அதனைத் தாங்க முடியாமல் கருடன் பாதலத்தில் வீழ்ந்து அலறி ஓலமிட்டு நெடுங்காலம் திருமாலைத் தொழுது இறைஞ்சித் துதித்து தன் ஆணவத்தை அழித்து மீண்டும் திருமாலின் வாகனமான புராணவரலாற்றுச் செய்தியை,

**"அதனால் 'பகைவர் இவர்; இவர் நட்டோர்' என்னும்**
**வகையும் உண்டோ, நின் மரபு அறிவோர்க்கே?**
**ஆயிர அணர்தலை அரவு வாய்க்கொண்ட**
**சேவல் ஊர்தியும், 'செங்கண் மாஅல்!'**
**ஓ! எனக் கிளக்கும் கால முதல்வனை;**
**ஏஎ இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்"**

**(பரி. 3, திருமால், 3:56-62)**

எனப் பதிவு செய்துள்ளார் கடுவன் இளவெயினனார்.

**திருமாலின் கருடக் கொடி ஓவியமும் வடிவமும்**

கீரந்தையார் பாடிய திருமால் குறித்த பரிபாடலில் (பரி. 2, திருமால், 2:60-68) திருமாலின் கருடக்கொடியைக் குறிப்பிடும் புலவர், கருடனின் வாயலகின் சிவந்த நிறத்தினைச் சிறப்பித்து அப்பறவையினை ஓவியமாக எழுதப்பட்ட கொடியினை உயர்த்தியவன்; வேதத்தில் கூறப்பட்ட ஆசான் வேள்வித் தலைவன்; வேள்வித் தலைவன் திருமாலே ஆதலின் அவனது சொல் மறைமொழியாகவும், மந்திரமொழியாகவும் உள்ளது. படிப்படியாக ஒன்றற்கொன்று உயர்ந்ததாகச் செய்யப்படும் வேள்வியில் வேள்வித்தூணாகி நின்று வேள்விப் பசுவினை உணவாகப் பற்றிக் கொள்ளும் இயல்புடையவனும் திருமாலே. வேதமுறைப்படியாகக் குண்டத்தில் தீயைமூட்டி, அத்தீயில் நெய் முதலிய வேள்விப் பொருள் களைச் சொரிந்து அச்செயலால் மிக்க ஒளியுடன் திகழும் அவ் வொளிச்சுடரின் பெருக்கத்தைச் செய்யும்போது அதில் தோன்றும் ஒளிவடிவமாகத் திருமால் வெளிப்படுவான் என்கின்றார். ஆதலால் ஆசான் வேள்வி திருமாலின் வடிவம் என்றும், ஆடுகொளல் திருமாலின் உணவு என்றும், வேள்விச்சுடர் அவன் வெளிப்பாடு என்றும் அறிய முடிகின்றது.

**"செவ்வாய் உவணத்து உயர் கொடியோயே!**<br>
**கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும்**<br>
**படிநிலை வேள்வியுள் பற்றி ஆடு கொளலும்,**<br>
**புகழ் இயைந்து இசைமறை உறுகனல் முறை மூட்டித்**<br>
**திகழ்ஒளி ஒண்சுடர் வளப்பாடு கொளலும், -**<br>
**நின் உருபுடன் உண்டி;**<br>
**பிறர் உடம்படுவாரா**<br>
**நின்னொடு புரைய**<br>
**அந்தணர் காணும் வரவு"** **(பரி.2 60-68)**

என்பது அப்பாடலடிகளாகும். ஊன் கண்ணுடையார் படிமையிலும் (சிலை, சிற்பம்) அந்தணர் வேள்வித் தீயிலும், யோகிகள் உள்ளத்திலும், ஞானிகட்கு எவ்விடத்தும் இறைவன் வெளிப்படுவான் என்பதையே புலவர் 'ஒண்சுடர் வளப்பாடு கொளல்' என்கின்றார். இதற்கேற்ப வடலூர் வள்ளலார் (இராமலிங்க அடிகளார்), 'ஞானிகள் கடவுளை எங்கும் உபாசிப்பார்கள் என்றும், கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்கள் என்றும், பத்தி காண்டிகள் விக்கிரத்தில் உபாசிப்பார்கள் என்றும் விதித்திருக்கின்றது' என்று சுப்பிரமணியம் என்பதற்கு விளக்கம் கூறும்போது கூறியிருப்பதும் ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

**பலதேவன் புதையிருள் உடுக்கையன்**

யாவராலும் உணர்ந்து அறிய முடியாத தொன்மையும் (முதுமையும்), பலதேவனுக்கு இளையவன் என்பதால் இளமையும், வேதங்கள் கூறும் ஞானப்பொருளின் நடுவும் எக்காலத்தும் எவ்விடத்துமுள்ள உயிர்ப்பொருட்களுக்கு உட்பொருள் ஆதலும் என்றும் திருமாலுக்குரிய சிறப்புக்கள் ஆகும். பலதேவன் புதையிருள் உடுக்கையன் என்பது அவனுக்கு யமுனை நீல ஆடை வழங்கியது என்னும் புராண வரலாற்றைக் குறிக்கும்.

**"நீயே 'வளையொடு புரையும் வாலியோற்கு அவன்**
**இளையன்' என்போர்க்கு இளையை ஆதலும்,**
**புதையிருள் உடுக்கைப் பொலம் பனைக்கொடியோற்கு**
**முதியை என்போர்க்கு முதுமை தோன்றலும்**
**வடுஇல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த**
**கெடுஇல் வேள்வியுள் நடு ஆகுதலும்**
**இந்நிலைத் தெரிபொருள் தேரின், இந்நிலை**
**நின்நிலைத் தோன்றும் நின் தொல்நிலைச் சிறப்பே"** (பரி. 2:20-27)

**திருமாலின் சங்கும் சக்கரமும்**

கீரந்தையார் பாடிய திருமால் குறித்த பரிபாடலில் திருமாலின் படைக்கலக் கருவிகளாகிய சங்கு சக்கரத்தின் சிறப்புக்களைப் (பரி.2:36 51) பின்வருமாறு விளக்கியுள்ளார். திருமால் தம் திருக்கரங்களில் ஏந்தியுள்ள சங்கு சக்கரப்படைகள் பேராற்றல் மிக்கவை. சங்கு தன் ஓசையாலும், சக்கரம் தன் இயக்கத்தாலும் பகைவர்கள் அஞ்சி நடுங்குமாறும், தலைகள் அறுபட்டு அழியுமாறும் செய்யும் வல்லமை படைத்தவை. இக்காட்சி பிற்காலத்தில் தோன்றிய பரணி போன்ற சிற்றிலக்கியங்களில் இடம்பெறும் போர்க்களக்காட்சிகளுக்கு அடிப்படையாகும்.

திருமாலின் கையிலுள்ள வலம்புரிச்சங்கு முழங்கியபோது, உள்ள உறுதி குறையாமல் எழுச்சியுடன் திருமாலுடன் போர் செய்ய எதிர்வந்து நின்ற அசுரர்களின் கொடிகள் அற்று முறிந்து வீழ்ந்தன. அவர்களின் காதுகள் செவிடாயின. அவர்களுடைய முடிகள் அதிர்ந்தன. அவர்கள் நிலத்தில் நிலைதளர்ந்து நடுங்கினர். திருமாலின் சக்கரப்படை அவனுடைய பகைவர்களாகிய அவுணர்களின் தலைகள் வளமையிழந்து அவை அணிந்திருந்த மாலையுடன் மண்ணில் சாய்ந்து புரளும்படி வீழ்த்தியது. பகைவராகிய அவுணர்தம் கூட்டத்தை ஒன்றாக அழிக்கும் சக்கராயுதம் உடல்கொல்லும் தன்மையால் இயமனை ஒத்திருந்தது.

**வராக கற்பம்**

நீரினுள் மூழ்கிக் கிடந்த நிலஉலகத்தைத் திருமால் வராக அவதாரம் எடுத்து, உயிர்கள் தோன்றி வாழ்வதற்காக மேலே கொணர்ந்தமையால் இந்த ஊழிக்காலம் 'வராக கற்பம்' என்றழைக்கப் பெறுகின்றது. இது கணக்கில் அடங்காத திருமாலின் திருவிளை யாடல்களில் ஒன்றை மட்டுமே குறிக்கின்றது. இவ்வாறான பல திருவிளையாடல்களை நிகழ்த்திய திருமாலின் தொன்மைக்குரிய ஊழிகளை யாவரும் கணக்கிட்டு அறிய முடியாது.

**"கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய**

**ஊழி ஒருவினை உணர்த்தலின், முதுமைக்கு**

**ஊழி யாவரும் உணரா;**

**ஆழி முதல்வ! நிற் பேணுதும் தொழுது" (பரி. 2: 16-19)**

நிலம் நீரிலும், நீர் தீயிலும், தீ காற்றிலும், காற்று வானத்திலும், வானம் மூலப்பொருள்களிலும் முறையே ஒன்றனுள் ஒன்றாக ஒடுங்கும் முறையைக் கீரந்தையார் இப்பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். உலகம் முடிவில் திங்களும் ஞாயிறும் ஒளியிழந்து துகளாகி விண்வெளியில் சிதறிப்போக நிலம் முதலிய பூதங்கள் தத்தம் ஆற்றல் கெட்டுத் தூளாகி அழியும் என்னும் கருத்து இக்காலத்து இயற்பியலார் கருத்துடன் தொடர்புபடுத்திச் சிந்திக்கத்தக்கது.

**பாம்பணைப் பள்ளி**

கருடக்கொடி வரையப்பட்ட அழகிய கொடியைக் கொண்ட திருமால், ஆதிசேடனாகிய பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளான். ஆதிசேடனாகிய பாம்பு ஆயிரம் தலைகளைக் கொண்டது என்பதும், அது திருமாலுக்கு அணையாகவும் குடையாகவும் இருந்து காப்புச் செய்வதும் பரிபாடலில் குறிக்கப்பெற்றுள்ளது.

**"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை**

**தீஉமிழ் திறலொடு முடிமிசை அணவர,**

**மாவுடை மலர்மார்பின் மைஇல் வால்வளைமேனி,**

**சேய்உயர் பணைமிசை எழில்வேழம் ஏந்திய" (பரி. 1: 1-4)**

இப்பாடலடிகளில் திருமாலின் அணையும் கொடியும் குறிக்கப்பெற்றுள்ளது.

**திருமாலின் அவதாரம்**

இப்பாடல் தொடர்ச்சியாகத் திருமாலின் அவதாரங்களையும் குறிக்கின்றது.

"வாய் வாங்கும் வளை நாஞ்சில், ஒருகுழை ஒருவனை
எரிமலர் சினைஇய கண்ணை; பூவை
விரிமலர் புரையும் மேனியை; மேனித்
*திருஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பில்*
தெரிமணி பிறங்கும் பூணினை; மால்வரை
எரி தீர்ந்தன்ன பொன்புனை உடுக்கையை
சேவல்அம் கொடியோய்! நின் வலவயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே" (பரி. 1:5-13)

மாவுடை மலர் மார்பினனாகிய திருமாலே, வேழக் கொடியும் நாஞ்சிலும் ஒற்றைக் குழையும் கொண்ட பலதேவனாகவும் உள்ளான் என்னும் குறிப்பு, அவதாரநிலையில் இராமன், கண்ணன், பலராமன் என வேறுபட்டுக் காணப்படினும், பரம்பொருள் நிலையில் ஒருவனே என்பதை உணர்த்தும்.

**காமனும் இராமனும்**

இராமன், கண்ணன் முதலான திருமாலின் அவதாரங்கள் தீயோரையும் தீமைகளையும் அழித்து நல்லோரையும் நன்மைகளையும் காக்கும் நோக்குடையன. காமனும் ராமனும் திருமாலின் மைந்தர் என்பது புராண மரபாகும். காமனின் தம்பியே ராமன் ஆவான்.

"பொருவேம் என்றவர் மதம் தபக் கடந்து
செரு மேம்பட்ட செயிர்தீர் அண்ணல்!
*இருவர் தாதை! இலங்கு பூண் மாஅல்!*" (பரி.1:29-31)

**நரசிம்ம அவதாரம்**

பரிபாடலில் திருமால் குறித்துக் கடுவன் இளவெயினனார் பாடிய பாடலில் (பரி.4:10-21) திருமால் இரணியனைத் தழந்த நரசிம்ம அவதாரம் பேசப்பெற்றுள்ளது. பிரகலாதன் திருமாலைப் புகழ்ந்ததால் பொறுக்க முடியாத இரணியன் தன் நெஞ்சில் கொண்ட பொறாமையால் புகைந்து கடுஞ்சினத்துடன் தன் மகன் என்றும் பாராமல் பிரகலாதனைத் துன்புறுத்தினான். தன்னை இகழ்ந்து துன்புறுத்துவது தன் தந்தை என்பதால் பிரகலாதன் தந்தையை இகழாமல் திருமாலை நெஞ்சில் நினைத்து வருந்தினான். தன் அன்பனின் வருத்தம் போக்கத் திருமால் தூணிலிருந்து வெளிப்பட்டு நரசிங்கமாகத் தோன்றி, கூரிய நகங்களால் இரணியனைக் கிழித்துக் கொன்று பிரகலாதனுக்கு அருளினான். இதனைப் பரிபாடல்,

"செயிர்தீர் செங்கட் செல்வ! நிற்புகழ
புகைந்த நெஞ்சின், புலர்ந்த சாந்தின்,
பிருங்கலாதன் பலபல பிணிபட
வலந்துழி மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன், தாதை ஆகலின்
இகழ்வோன், இகழா நெஞ்சினனாக, நீ இகழா
நன்றா நட்ட அவன் நன்மார்பு முயங்கி
ஒன்றா நட்டவன் உறுவரை மார்பின்
படிமதம் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னரொடு இடிமுரசு இயம்ப
வெடிபடா ஒடிதூண் தடியொடு
தடிதடி பலபட வகிர் வாய்ந்த உகிரினை" (பரி.4:10-21)

**நிறைவுரை**

இவ்வாறு பரிபாடலில் திருமால் பற்றிய பாடல்களில் திருமாலின் அவதாரங்கள், திருவிளையாடல்கள், வடிவத்தோற்றம், தொல்மரபு சார்ந்த புராண, இதிகாசக் கூறுகள் ஆகியன பரவலாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இவையே இன்று திருமால் கோயில் கோபுரங்களிலும் மண்டபங்களிலும், குறிப்பாகத் திருமாலிருஞ்சோலைக் குன்றத்தில் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் வடிவமைக்கப் பெற்றுள்ளன.



| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

# தொல்காப்பியம் நம்பியகப்பொருள் கற்பியல் ஒப்பீடு

முனைவர் செ.ரவிசங்கர்

**முன்னுரை**

உலகம் எங்கும் மரபு, சட்டம் முதலியவற்றால் ஒழுங்குபடுத்திய நிலையில் திருமணம் ஓர் உயர்ந்த அமைப்பாகத் திகழ்கிறது. சமூக அமைப்பில் அதற்குச் சிறப்பு இருப்பதால் நன்மணம், பலரறிமணம் தோன்றிய மரபின் மன்றல் என்றெல்லாம் புகழ்ந்தனர். நிலத்தொடு நீர் இயைந்தன்னார் நட்பு குடும்ப வாழ்வோடு உலக வாழ்வைப் பிணைத்து விடுவதால் கற்பியல் ஒரு பயிற்சிக்களம் ஆகிவிடுகிறது. அதில் பெண்ணின் பங்கு பெரிது. தன்னை மறந்து கணவன், மக்கள், சுற்றம், விருந்து என அனைவரையும் பேணி நிற்கும் தியாகம் பெரிது, அதனால் தெய்வ வாழ்வாக மாறி விடுகிறது. பரம்பரை அழிந்து விடாதவாறு விளக்கேற்றிட, செல்வக் குழந்தைகளைப் பெற்றுப் புகழ் தரும் அறப்பணியில் ஈடுபடும் பெண்மகளை மதுரை மருதன்இளநாகனார் பெரிதும் பாராட்டுவார். கடவுள் கற்போடு குடிக்கு விளக்காகிய புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின் நன்னராட்டி என்பார். இத்தகு சிறப்பு வாய்ந்த கற்பியல் குறித்த செய்திகளைத் தொல்காப்பியர் மிகத் தெளிவாகத் தொல்காப்பியத்தில் அமைத்துள்ளார். அதனைத் தொடர்ந்து நாற்கவிராச நம்பி அவர்கள் நம்பியகப்பொருளில் கற்பியல் குறித்த செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு நூல்களில் இடம்பெற்றுள்ள செய்திகளை இக்கட்டுரை ஒப்பிட்டுக் காண்கிறது.

**கற்பியல் செய்திகள்**

தொல் கற்பியலில் உள்ள செய்திகளைத் தொல்காப்பியம் 52 நூற்பாக்களில் கூறிச் செல்கிறது. அத்றகுள் திருமணச் சடங்கு, உடன்போக்கிலும் திருமணம் உண்டு. அடியோர்க்கும் இது நிகழலானது, கரணம் தோன்றிய காரணம், கற்பில் தலை மகன் கூற்று, கற்பில் தலைமகள் கூற்று, இறைச்சிப் பொருளின் பயன், கற்பில் தோழி கூற்று, காமக்கிழத்தியர் கூற்று, வாயில் கூற்று, செவிலி கூற்று, அறிவர் கூற்று, அறிவர் கடிந்து கூறுதல், தலைவன் ஊடல், ஊடற் காலத்துத் தோழி கூற்று, தோழி தலைவனை இடித்துரைத்தல், தலைமகள் ஊடும் முறைகளில் ஒன்று, காமம் மிகுதியால் தலைவன் பணிந்து பேசுதல், ஊடலின் போது தலைவி கூற்று, ஊரார் கூறும் அலர், அலரும் காதல் வாழ்வும், தலைவனின் காம விளையாட்டு, வாயிலோர் கூற்று, வாயிலோர் மனைவியிடம் கூறுதல், வாயில்கள் இடித்துரைத்தல், கூத்தர் கூற்று,

கூத்தரும்/பாணரும் பேசுதல், இளையோர் கூற்று, உழைக்கும் ஏவலர் பணிகள், தலைவன் கலங்குமிடங்கள், தலைவி இரக்க உணர்வு, தலைவியின் பொறுமை, பாசறையில் மகளிர், பார்ப்பார் கூற்று, வாயிலோர் பேசும் முறை, வாயிலோர் கடிந்து பேசுதல், தலைவி தன்னைப் புகழ்ந்து பேசுமிடம், தலைவன் தன்னைப் புகழ்ந்து பேசுமிடம், பாங்கன் கழறுதல், பாங்கன் மறுத்தல், தலைவன் பிரிய முயலுதல், தலைவன் செலவழுங்குதல், பாசறையில் தலைவி நினைவு, பரத்தையிற் பிரிவுக்குரிய காலம், கல்விப் பிரிவுக்குரிய ஆண்டு வரையறை, வேந்தனுக்குற்றுழிப் பிரியும் காவல் பிரிவு, தலைவன் தலைவி விளையாடி மகிழ்தல், இல்லற வாழ்வின் பயன், பன்னிரண்டு வாயில்கள், தலைவன் வினை முடித்துத் திரும்புதல் போன்ற செய்திகள் தொல்காப்பியத்தில் கற்பியல் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

**நம்பியகப் பொருள்**

தொல்காப்பியர் கூறியது போல நம்பியகப்பொருள் ஆசிரியரும் கற்பிற்குரிய செய்திகளைக் கூறியுள்ளார். அதாவது கற்பின் இலக்கணம், கற்பிற்குரிய கிளவித் தொகை, அவற்றுள் 1. இல்வாழ்க்கை, இல்வாழ்க்கையின் விரி 2. பரத்தையிற் பிரிவு, பரத்தையற் பிரிவின் வகை, உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள், இதுவும் அது, பரத்தையிற் பிரிவின் விரி இவை எனல், ஓதற் பிரிவு முதலிய மற்றைப் பிரிவுகளுக்கு உரிய கிளவிகள், 3.ஓதற் பிரிவு 4. காவற் பிரிவு 5. தூதிற் பிரிவு 6. துணைவயின் பிரிவு 7. பொருள் வயின் பிரிவு, சில பிரிவுகளின் பொதுக் கிளவி இவை மட்டுமே கற்பியலில் இடம்பெற்றுள்ள செய்திகள்.

இங்குத் தொல்காப்பியர் கூறிய பல செய்திகளுள் நம்பியகப் பொருள், பிரிவினை மட்டும் எடுத்துக் கொண்டு கற்பியலுக்குரிய செய்தி யாகக் கட்டமைத்துள்ளது. மற்ற செய்திகளை எல்லாம், வரைவியல், ஒழிபியல் போன்ற-தனி இயல்களுக்குள் கூறிச் செல்கிறது.

**திருமணச்சடங்கும் இலக்கணமும்**

திருமணச்சடங்காக அதன் நிகழ்வுகளைத் தொல்காப்பியர் கூறும் போது ஏழு வகையாகக் கூறியுள்ளார். 1. முறைவெளிப்படுதல், 2. தமரிற் பெறுதல், 3.மலிவு , 4.புலவி, 5.ஊடல், 6. உணர்வு, 7. பிரிவு, இவற்றில் மறை வெளிப்பாடு என்பது களவியலின் இறுதியில் அமைந்துள்ளது.

**மறை வெளிப்பாடு**

தொல்காப்பியம் களவியலில் மறை வெளிப்பாடு குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

1. "ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாய் எனப்படுவோள் செவிலியாகும்" - 122

இங்குத் தலைவி தன் காதலைச் செவிலித் தாயிடம் கூறுகிறாள். இது காதல் வெளிப்பாட்டின் முதல் நிலை,

2. தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே - 114
3. தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும் - 136
4. கிழவோன் அறியா அறிவினள் இவளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின் - 115
ஐயக் கிளவியும் அறிதலும் உரித்தே
5. தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப -135
6. அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும் -137
7. வெளிப்படை தானே கற்பினொடு ஒப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக
வரையாது பிரிதல் கிழவோர்க் கில்லை -139

இவையெல்லாம் தலைவியின் காதல் வெளிப்படும் சூழ்நிலைகள் இவற்றைக் கற்பியலின் முன் பகுதியில் வைக்க வேண்டும். ஆனால் களவியலில் வைத்துள்ளனர்.

**தமரிற் பெறுதல்**

தொல்காப்பியத்தில் கற்பியலில் திருமணச்சடங்கு பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர் கற்பியல் நிகழ்வுகளில் மறை வெளிப் பாட்டிற்கு அடுத்துக் கரணம் குறித்த செய்தியைக் கூறுகிறார். அதாவது,

"கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே" - (தொல்.1088)

இங்குக் கற்பு என்பது குறிக்கப்படுகிறது. தலைவி வீட்டார் கொடுக்கத் திருமணம் நடைபெற்றது என்பதை இந்நூற்பா விளக்குகிறது.

"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலையான" (தொல்.1089)

இந்நூற்பா தலைவியை மணம் செய்து கொடுத்தற்குரியவர்கள் இல்லாமலும், காதலர் உடன்போகிய காலத்தில் மணச்சடங்கு நடைபெறும் என்கிறது தொல்காப்பியம்.

**நம்பியகப்பொருள்**

இக்கருத்தினையே நம்பியகப்பொருள் ஒரே நூற்பாவாக ஆக்கி கற்பியலில் கூறாமல், வரைவியலில் வரைவின் இலக்கணம் என்று கூறியுள்ளது.

**"வரைவு எனப்படுவது உரவோன் கிழத்தியைக்**
**குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்**
**கரணமொடு புணரக் கடிஅயர்ந்து கொளலே" (நம்பி.171)**

அதாவது வரைவு என்று சொல்லப்படுவது தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவும் கொடாது ஒழியவும் வதுவைச் சடங்கோடு பொருந்த மணஞ்செய்து கோடல் என்கிறது நம்பியகப்பொருள்.

இங்குத் தொல்காப்பியர் கரணம் என்பதனைக் குறித்து விரிவான செய்தியைக் கூறிச் செல்கிறார். தொல்காப்பியர் 'கற்பெனப்படுவது கரணமொடு புணர' என்று கூறியுள்ளார்.

ஆனால் நம்பியகப்பொருள் கற்பின் இலக்கணம் கூறும் போது கற்பியலின் முதல் நூற்பாவாக,

**"பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது**
**மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்**
**பிரிவும் பிறவும் மருவிய தாகும்" - 200 (நம்பி.கற்பு)**

என்கிறார்.

தொல்காப்பியர் கூறிய கருத்தில் இருந்து சற்று மாறிப் பொலி வமைந்த சிறப்பினையுடைய கற்பெனப்படுவது உள்ள மகிழ்ச்சியும், ஊடலும் ஊடல் உணர்த்தலும், பிரிவும் பிறவும் பொருந்தியதாம் என்கிறார். அதாவது நம்பியகப் பொருள் ஆசிரியரைப் பொருத்தவரையில் கற்பியலில் பிரிவு குறித்த செய்தியை மட்டுமே முதன்மைப்படுத்துகிறார்.

**மலிவு**

மலிவு என்பது இன்ப வளத்தைக் குறிக்கும். இளமையில் அன்பினால் இன்பம் ஆர்தல், முதுமையில் அறத்தினால் இன்பம் ஆர்தல் என்ற இரு நிலையும் அதனுள் அடங்கும். இதனைத் தொல்காப்பியர்,

**"யாறும் குளனும் காவும் ஆடிப்**
**பதி இகந்து நுகர்தலும் உரிய என்ப" (தொல்.189)**

என்று இளமையில் மகிழ்ச்சியைக் கூறுகிறார். அதற்கு அடுத்த நூற்பாவில் முதுமையில் மகிழ்ச்சியாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

"காமம் சான்ற கடைக் கோள் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல்.190)

இதில் அன்பு மிகுந்த வாழ்வின் இறுதிப் பகுதியில் பக்க பலமாக வளர்ந்து நிற்கும் மக்களோடு கூடி அறம் விரும்பும் சுற்றத்தாரோடு இணைந்து கிழவனும் கிழத்தியும் உலக நலம் பேண முன்வர வேண்டும். அதுவே, முதுமை அடைந்த வாழ்வின் பயன், என்று யூங் கூறுவது பொருத்தமாக அமைந்துள்ளது. இது போலவே மகிழ்ச்சியின் வரையறையை நம்பியகப்பொருள் ஆசிரியர் வரைவியலில் வரைவு மலிதல் என்னும் பகுதியில்,

"வரைவு முயல் வுணர்த்தல் வரவெதிர் உணர்த்தல்
வரைவு அறிந்து மகிழ்தல் பராவல் கண்டு உவத்தலென்று
ஒரு நால் வகைத்தே வரைவு மலிதல்" (நம்பி.173)

*என்று கூறுகிறார். அதனை அடுத்து வரைவு மலிதலின் விரியாக,*

"காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக்கு உணர்த்தலும் காதலி நற்றாய்
உள்ள மகிழ்ச்சி உள்ளலும் பாங்கி
தமர்வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தலும்
அவளுவகை ஆற்றாது உளத்தொடு கிளத்தலும்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் தலைவி
மணப்பொருட்டாக அணங்கைப் பரா நிலை
காட்டலும் கண்டோன் மகிழ்வும் என்று ஈட்டிய
இருமூன்றும் ஒன்றும் வரைவு மலிதற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந்தோரே" (நம்பி.174)

இவையெல்லாம் இன்பம் விளைவிக்கும் நிலைகள் என்பதனை நம்பியகப்பொருள் கூறுகிறது. தொல்காப்பியர் இரண்டு இடங்களில் இளமையிலும் முதுமையிலும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலைகளைக் கூறியுள்ளார். ஆனால் நம்பியகப்பொருள் அதனை விரித்து ஏழு வகையான இடங்களில் மகிழ்ச்சியாகத் தலைவனும் தலைவியும் இருப்பார்கள் என்பதைக் கூறிச்செல்கிறது.

**ஊடல்**

ஊடல் குறித்த செய்தி தொல்காப்பியத்தில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளது. அதாவது ஏழு நூற்பாக்களில் ஊடல் பற்றிய செய்திகளையும், ஊடல் தணிக்கும் மாந்தர்களையும் கூறியுள்ளார்.

**"உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**
**புலத்தலும் ஊடலும் கிழவோட்கு உரிய" - தொல். 1102**

**"புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்**
**சொலத்தகு கிளவி தோழிக் குரிய" - தொல். 1103**

**"பரத்தமை மறுத்தல் வேண்டியும் கிழத்தி**
**மடத்தகு கிழமை உடைமையானும்**
**அன்பிலை கொடியை என்றலும் உரியள்" - தொல். 1104**

**"அவள் குறிப்பு அறிதல் வேண்டியும், கிழவி**
**அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே" - தொல் 1105**

**"காமக் கடப்பினுள் பணிந்த கிளவி**
**காவற் காலை கிழவோற்கு உரித்தே**
**வழிபடு கிழமை அவட்குஇய னான்" - தொல் 1106**

இந்த நூற்பாக்கள் எல்லாம் தலைவன் ஊடல் நிலை, தோழி கூற்று, தோழி தவைனை இடித்துரைத்தல், தலைவி ஊடல்கொள்ளல், தலைவன் பணிந்து பேசுதல் போன்றவையாக அமைகின்றன. ஆனால் நம்பியகப் பொருளில் இது போன்ற ஊடல் செய்திகளைக் கற்பியலில் காண முடியவில்லை.

**நம்பியகப் பொருள்**

நம்பியகப் பொருளில் நூற்பா 205-206 உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள், உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள் என்னும் இரண்டு தன்மைகளில் ஊடல் குறித்த செய்திகள் இடம் பெறும் என்று கூறிச் செல்கின்றது.

**பிரிவு**

பிரிவு குறித்த செய்திகளைத் தொல்காப்பியம் நம்பியகப்பொருள் இரண்டுமே கூறியுள்ளன. கல்வி, வேந்துறுதொழில், பரத்தை, பொருள், உறவு என்னும் காரணங்களால் பிரிவு அமைவதுண்டு. ஆனால் அகத்திணையியல், உடன்போக்கு, பொருள், தூது, ஓதல், பகை, காவல், தெய்வம் என்ற அடிப்படையில் பிரிவை விளக்குகிறது. இதில், சில

கற்பியலில் பொருந்தி வரும், சில வராது.

நம்பியகப்பொருளில் பிரிவு என்பது பரத்தையிற் பிரிவு, ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்று பிரிவினைக் கூறுகிறது. இதில் தொல்காப்பியர் கூறிய வேந்துறு தொழில் என்பதில் நம்பியகப் பொருள் கூறியுள்ள காவற்பிரிவு, தூதிற் பிரிவு இரண்டும் அடங்கும், அந்த வகையில் இரண்டு நூல்களும் பிரிவு குறித்த செய்தியை ஒன்று போலவே கூறியுள்ளன.

**கல்விபிரிவு**

ஓதற் பிரிவு என்பதனைத் தொல்காப்பியர் கல்விப் பிரிவு என்பதாகக் கூறியுள்ளார்.

**"வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது" - 1134**

இங்கு கல்விக்காக மூன்று ஆண்டுகள் பிரியலாம் என்கின்றார் தொல்காப்பியர். ஆனால் நம்பியகப்பொருள்

**"இல்வாழ்க்கையே பரத்தையிற் பிரிவே**
**ஓதற் பிரிவே காவற் பிரிவே**
**தூதிற் பிரிவே துணைவயின் பிரிவே**
**பொருள்வயின் பிரிவெனப் பொருந்திய ஏழும்**
**வளமலி கற்பின் கிளவித் தொகையே" - நம்பி 201**

என்று பொதுவான நூற்பாவைக் கூறிச் செல்கின்றது. இங்கு எந்தப் பிரிவு குறித்தும் தனி நூற்பா கூறவில்லை. மாறாகப் பிரிவுகளுக்குரிய கிளவிகளைக் கூறியுள்ளது.

**"பிரிவு அறிவுறுத்தல் பிரிவு உடன்படாமை**
**பிரிவு உடன் படுத்தல் பிரிவு உடன் படுதல்**
**பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்புறை**
**வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்று**
**ஒருமையிற் கூறிய ஒன்பது வகைய**
**கல்வி முதலா எல்லாப் பிரிவும்" - நம்பி 209**

என்கிறது. இங்கு கல்விக்குரிய பிரிவு தலைமகனான் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தியது என்று கூறித் தஞ்சைவாணன் கோவையில் உள்ள 408 வது செய்யுளை எடுத்துக்காட்டியுள்ளது. தொல்காப்பியர் கூறியது போன்று கல்விக்குரிய பிரிவின் ஆண்டினைக் குறிப்பிடவில்லை.

**வேந்துறு தொழில்**

**"வேந்துறு தொழில் யாண்டின் அகமே" - 1135**

தொல்காப்பியர் வேந்தர் பொருட்டுத் தூது, காவல் எனப்பிரிந்து சென்றால் அத்தொழில் பிரிவு ஓர் ஆண்டுக்குள் இருக்க வேண்டும் என்கிறது. ஆனால் நம்பியகப்பொருள் ஆண்டினைக் குறிப்பிடவில்லை, மாறாக இதனை இரண்டாகப் பிரித்து, தஞ்சைவாணன் கோவைப் பாடலைக் கொண்டு (411, 414) விளக்கிச் செல்கிறது. அதாவது தலை மகன் காவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூதிர் பருவம் கண்டு வருந்தியது தோழியாற்றுவித்தல் போன்றவையாக உள்ளன.

**பொருள்வயின் பிரிவு**

தொல்காப்பியர் பொருள்வயின் பிரிவு பற்றிக் கூறும்போது தலைவன் தன் ஆற்றலையும் நோக்கத்தையும் பெரிதுபடுத்திப் பேசுவான் என்பதனை,

**"கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி**
**கிழவோன் வினை வயின் உரிய என்ப"** -1127

என்று கூறுகிறார். ஆனால் நம்பியகப் பொருள் தோழி தலைமகளுக்குக் கூறுவதாகவே கருத்துரைக்கிறது. அதற்குத் தஞ்சைவாணன் கோவை 420 பாடலை நாராயண வேலுப்பிள்ளை சான்றாகக் கூறுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறாகத் தொல்காப்பியம் நம்பியகப்பொருள் கற்பியல் குறித்த செய்தியைப் பதிவு செய்கின்றன. நம்பியகப் பொருள் கற்பிற்குரிய செய்திகளை மூன்றாகப் பிரித்துக் கொண்டு எடுத்துரைக்கின்றது. அவை வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகும். தொல்காப்பியர் கூறியுள்ள கூற்றுக்களை எல்லாம் ஒழிபியலில் நம்பியகப்பொருளாசிரியர் கூறியுள்ளார். மேலும் கற்பியலில் வரும் வாயில்கள் குறித்த செய்திகளை நம்பியகப்பொருள் கூறவில்லை, அந்த வகையில் நம்பியகப்பொருள் கற்பியலில் இல்லறத்தையும் பிரிவினையும் முதன்மைப்படுத்திப் பிறவற்றைக் கற்பியலில் கூறவில்லை, தொல்காப்பித்தைப் போன்ற தெளிவான பார்வையை நம்பியகப் பொருளில் காணமுடியவில்லை.

# பக்தி இலக்கியத்தில் மகளிர்

முனைவர் சு.மலர்விழி
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ் கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரி
மதுரை.

**முன்னுரை**

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

உடம்பின் பயன் இறைவனை வணங்குவதாகும் அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுவதாகும் என்ற வள்ளுவரின் கருத்திற்கேற்ப இறைவனைத் தொழுதேற்றிப் பாடிய பக்திப் பாடல்கள் ஏராளம். இப்பக்தி இலக்கியங்களில் மகளிர் எவ்வாறெல்லாம் திகழ்ந்தார்கள் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தாய்மைப் பண்பு**

"இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின் – நிலைவிளம்பக்
கொள்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தாள் ஆர்கொல் எனக்கு"

திருஞான சம்பந்த பெருமானுக்கு அமைந்த தாயார்கள் மூவர் பெற்றெடுத்த நற்றாயாக விளங்கியவர் பகவதி அம்மையார் பொய்கைக் கரையில் அழுதபோது பால் சுரந்தமையால் தேவியும் சம்பந்தர் சமணரை வென்ற செய்தி கேள்விப்பட்டவுடன் பால் சுரந்த பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும் முறையே அன்புத் தாயாகவும் அருள் தாயாகவும் விளங்கினர். அன்புத்தாய், அருள்தாய் இருவரில் யார் உயர்ந்தவர் என்பதை விளக்குவதே கீழ்வரும் நால்வர் நான்மணி மாலைப்பாடல்,

"அழுதல் கண்டு முலை சுரந்த அன்னை – உமாதேவி
நினைவின் கொங்கை கரந்தவருட் கோமகளோ
பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி"

அழுத பிள்ளைகளுக்குப் பால் கொடுத்த உமாதேவியினும் நிலையறிந்து முலைசுரந்த மங்கையர்க்கரசியே உயர்ந்தவர் என்று சிவப்பிரகாச சுவாமிகள் குறிப்பிடுகிறார். இவர் இவ்வாறு

குறிப்பிடுவதிலிருந்து இறைவியினும் மகளிர் தாய்மைப் பண்பில் சிறந்து விளங்கினர் என்பது தெளிவாகிறது.

**மங்கையர்க்கரசியார்**

தமிழோடு பக்தி வளர்த்தவர் வரிசையில் முதலில் நாம் பார்ப்பது மங்கையர்க்கரசி மாதேவியார்.

கண்ணகி போராடியது தன் கணவர் கோவலனின் பழி நீங்கு வதற்காக, சீதை போராடியது தன் கற்புக்காக. பாஞ்சாலி போராடியது தன் மானத்தைக் காக்க, பதிவிரதை சாவித்திரி போராடியது தன் பதியைக் காப்பதற்காக, மங்கையர்கரசியார் போராடியது இவர்களை போல் அல்லாமல் தன் நாடு, மொழி, இனம், சமயம் என்னும் சமுதாய நலத்துக்காக என்று எண்ணிப்பார்க்கும் பொது தான் ஏன் மங்கையர்க் கரசியானார் என்பது விளங்கும்.

**உதாரணம்,**

ஞானசம்பந்தரின் துணை கொண்டு தனது கணவனை மன மாற்றம் செய்து சமணரை கழுவில் ஏற்றி தனது கணவனின் குறைகளையும் சரி செய்து சைவ சமயத்தை நிலை நாட்டச் செய்தவர்.

ஒரு பெண் வாழ்வது என்பது தன் கணவன், தன் குலம், தன் பிள்ளைகள் என்று இருந்துவிடாமல் தன் நாடு, தன் சமயம் என்று வாழ்ந்ததர்ல் தான் சேக்கிழார் பெரியபுராணத்தில்,

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி,
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை,
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நாடுற்ற இடர் நீக்கித்திங்கள்,
பொங்கொளிவெண்டிருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே"

என்று உயர்த்திப் பாடியுள்ளார்.

**காரைக்கால் அம்மையார்**

புனிதவதி என்னும் திருப்பெயருடைய அவ் அம்மையார் பிறந்ததிலிருந்து இறை நம்பிக்கையில் வாழ்கின்றார். இளம்பிராயத்தில் விளையாடும் போது கூட, இறையருளிலேயே திகழ்ந்து வாழ்ந்தார்.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேவித்தேன் – நிறந்திகழும்

நஞ்சயின்ற கண்டத்து வானோர் பெருமானே

எஞ்ஞான்று தீர்ப்பது இடர்"

இறைவனே, இந்த இளமைக் கோலத்துடன் நான் தலயாத்திரை செய்வேனேயானால், நான் யாரையும் பார்த்துச் சலனம் அடைய மாட்டேன். எனினும், என் இளமைக்கோலம் பிறரைச் சலனப்படுத்தக் கூடும்! ஆதலின் என் உடல் சதையை விடுத்து எனக்குப் பேய் வடிவம் கொடு! என்று வேண்டினாள். தன் இளம் உடம்பைச் சமூக நன்மை நோக்கித் துறப்பதற்கு எண்ணிய உண்மைத்துறவி இவள். இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். என் மனம் கெடாமல் இருப்பது மட்டுமல்லாமல், என் நடை, உடை, பாவனைகளினால் இந்தச் சமூகம் கெடாமல் பார்த்துக் கொள்வதுகூட தர்மம்தான். வாழ்வாங்கு வாழ்தல் என்றால் இதுவன்றோ வாழ்வு! இவரைக் கயிலைநாதன் "என் அம்மை இவள்" என்று நெகிழ்ச்சியோடு கூறியதற்கு இரண்டு காரணங்கள்.

1. தன் பங்கினைத் தாய்ப் பாசத்துடன் அடியாருக்கு வழங்கியது.

2. தன் செயல்பாடுகளினால் தன் தோற்றத்தினால் பிற உயிர்கள் மனம் கெடாமல் பாதுகாத்தது ஒன்று, பசி நீக்கியது பிறிதொன்று. பாவம் பிறருக்கும் நேராமல் பாதுகாத்தது.

3. இவ்விரண்டினால் புனிதவதியார், காரைக்கால் அம்மையார் ஆனார். ஒரு பெண் இல்வாழ்வு வாழ்கிறாள் அதில் தன்பக்கம் குற்றம். இன்றியும், அது மாறும் போது இறைபக்தியில் ஈடுபட்டுச் சமய வாழ்வு வாழத் தெளிவு கொள்கின்றார். எந்த நிலையிலும் அழிந்து போவதில்லை! வாழ்ந்து காட்டுகின்றார்.

"பிறவாமை வேண்டும், மீண்டும் பிப்புண்டேல்

உன்னை என்றும் மறவாமை வேண்டும் - இன்னும் வேண்டும்

அறவா! நீ ஆடும் போது உன் அடியின்கீழ் இருக்க"

என்று வேண்டினார். புனிதத் தலங்களைக் கால்களினால் மிதிப்பது கூடாது என்னும் பண்பாட்டையும், இறைவனை வழிபட்டுத் தலப் பதிகங்களை பாடலாம் என்னும் மரபினையும் உலகுக்கு உணர்த்திய முதல் ஆசிரியர் காரைக்கால் அம்மையார் தான். அதனால் தான் இன்றும் திருக்கோயில்களின் பிரகாரத்தில் இவர் மட்டும் அமர்ந்த திருக் கோலத்தில் இருக்கின்றார் ஆசிரியரை அமரவைத்துப் போற்றுவதுதானே சமய மரபு.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சங்கச் செய்திகள்

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 04.01.2016 அன்று முற்பகல், தமிழறிஞர் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்களும் துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்களும் தொல்லியலறிஞர் தமிழுக்கு ஆற்றிய சிறப்பான பணிகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும், கல்லூரி மாணவர்களும் திரளாகக் கலந்துகொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 06.01.2016 அன்று தமிழறிஞர் பிரமிள் அவர்களுக்கு நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

தமிழுக்கு ஆற்றிய சிறப்பான தொண்டு குறித்து முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் ஜெ.கோகிலா அவர்கள் மாணவர்களுக்கு எடுத்தனர். பேராசிரியர்களும் கல்லூரி மாணவர்களும் திரளாகக் கலந்து கொண்டு பிரமிள் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்க வளாகத்தில் 07.01.2016 அன்று முற்பகல், தமிழறிஞர் வெ.சாமிநாத சர்மா அவர்களுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பேராசிரியர்களும், கல்லூரி மாணவ மாணவியர்களும் திரளாகக் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். மாணவ, மாணவியருக்கு தமிழறிஞர் வெ.சாமிநாத சர்மா ஆற்றிய தமிழ்த் தொண்டு குறித்தும், அவர்கள் இயற்றிய நூல்களைப் பற்றியும் முனைவர் பூ.பூங்கோதை மற்றும் முனைவர் கோ.சுப்புலட்சுமி அவர்கள் எடுத்துரைத்தனர்.

ஜனவரித் திங்கள் 18ஆம் நாள் மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் முற்பகலில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் அன்னாரது திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து பேராசிரியர்களும், கல்லூரி மாணவ மாணவிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். சொல்லாய்வில் அறிஞர் தமிழுக்கு ஆற்றிய சிறப்பான தொண்டு குறித்து முனைவர்


அ.நந்தினி, முனைவர் பெ.இந்துராணி அவர்களும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்க வளாகத்தில் 19.01.2016 அன்று முற்பகல், தமிழறிஞர் கரிச்சான்குஞ்சு அவர்களுக்கு நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது தமிழ்ப் புலமை குறித்து கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன், துணை முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைத்தனர். பின்னர் பேராசிரியர்களும், கல்லூரி மாணவர்களும் திரளாகச் சென்று அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 20.01.2016 அன்று முற்பகல், தமிழறிஞர் ம.ப.பெரியசாமித் தூரன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அன்னாரது தமிழ்த் தொண்டு குறித்து முனைவர் மு.செந்தில்குமார், முனைவர் பா.நேருஜி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும், கல்லூரி மாணவ, மாணவியர்களும் திரளாகக் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 22.01.2016 அன்று முற்பகல், தமிழறிஞர் கிடுகு வேங்கடராம மூர்த்தி அவர்களுக்கு நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. முனைவர் பி.ஆறுமுகம், முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர் ப.பாலமுருகன், மாணவிகள் தரண்யா, ஜெ.செல்வராணி, பா.ஸ்ரீதேவி ஆகியோர் தமிழறிஞர் கிடுகு வேங்கடராம மூர்த்தி ஆற்றிய சிறப்பான பணிகள் குறித்துப் பேசினார்கள். பேராசிரியர்களும், கல்லூரி மாணவர்களும் திரளாகக் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# பிப்ரவரித் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



நா.வானமாமலை
(பிப்.2)




அறிஞர் அண்ணா
(பிப்.3)

எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை
(பிப்.3)



வீரமாமுனிவர்
(பிப்.4)



ஜி.யு.போப்
(பிப்.12)



ச.வையாபுரிப் பிள்ளை
(பிப்.17)



வை.மு.கோதைநாயகி அம்மாள்
(பிப்.20)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

பெரும்புலவர் திரு. **இரா.இளங்குமரன்**
முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

## மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும் கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ் மொழித்தேர்வு தமிழ்ச்சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ / மாணவியர்களுக்கு சங்கத்தால் சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பெரும்பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான தமிழ்ச்சங்கத் தேர்வுகள் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு முதல்தாள் 29.01.2016ஆம் நாளன்றும், இரண்டாம் தாள் 30.01.2016ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணவர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
Madurai Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-625 009.